224878

ஓம்

ஜீவானந்த போதினி

சிறந்த தமிழ்ப் புலவர்களைக்கொண்டு நடத்தப்படுவது

மலர் 1	உருத்திரோத்காரி ஆண்டு கார்த்திகைத்திங்கள் நவம்பர் 1923	இதழ் 8

கடவுள் வணக்கம்

சிவபெருமான் :

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்,
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே,
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்து ஒருதீம் பருப்பு இடியும் விரவி,
இனித்தநறு நெய் அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி,
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே,
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத்து அரசே,
அடிமலர்க்கு என்சொல்லணியாம் அலங்கலணிந் தருளே.

— இராமலிங்க சுவாமிகள்.

திருமால் :

குடதிசை முடியை வைத்துக், குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித், தென்திசை இலங்கை நோக்கி,
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலும் ஆ கண்டு
உடலெனக்கு உருகு மாலோ! என்செய்கேன் உலகத்தீரே.

கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டுப்,
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள்மால், இறைவன், ஈசன், கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன், ஏழையேன், ஏழையேனே?

— தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

தமிழ் :

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும், மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

— பரஞ்சோதி முனிவர்.

நோய்

மக்களுக்குப் பழவினையானும் காரணங்களானும் பிணிகள் வரும். பழவினையால் வரும் நோய் அவ்வினை நுகரப்பட்ட பின்னரே நீங்கும். காரணங்களால் வரும் நோய் மருந்து உட்கொள்ளுதலி னால் நீங்கும். காரணங்களென்பன, ஒருவருக்கு உணவு, செயல்கள் முதலியன ஒவ்வாமையாம். காரணங்களுக்கும் பழவினை ஓராற் றான் காரணமாகும். அஃதாவது ஒருவனுடைய விருப்பம், அறிவு, தொழில் முதலியன நிகழுந்தோறும் அவன் வினையும் பரிபாகப்பட்டு வருதலின் அவ்வினையின் வழியே அறிவு, விருப்பம், தொழில் முதலியனவுஞ் செல்லுமென்பது. ஆணவ மலத்தடையால் அறிவு, விருப்பம், தொழில் ஆகிய மூன்றும் நிகழுமாறின்றி இருட்டறையில் கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த உயிர்களுக்கு அவ் வாணவ மலத்தடையை நீக்கி, அறிவை விளக்கி அறியாமையைத் தேய்த்து தனது பேரின்பத்தை ஊட்டும் நிமித்தம் எல்லாம் வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய இறைவன் தனது இயற்கைப் பேரருட்டிறத்தாலே ஆணவ மலத்துக்குரிய மறைக்கு மாற்றலை உயிர்களின் தொழிலாற்றலின்கண் நிகழவொட்டாது விளக்கியும், அவ்வாறே ஆன்மாக்களின் அறிவாற்றலையும், விருப்பத்தையும் விளக்கியும் அவை போகம் நுகருமாறு செய்து வினைக்கழிவின்கண் வீடுபேற்றை யருளுவன். இங்ஙனம் வினை பரிபாகமடைய உயிர்கள் இன்பதுன்பங்களை நுகர்ந்துவரும் என்பது உண்மை நூல்களின் கருத்தாகலின் துன்பநிலைக் களனாகவுள்ள நோயும் ஒருவருக்கு நன் மை பயப்பதேயாம்.

மேல்நோக்காக உலகவியலை ஒட்டி நோக்குமிடத்தும் நோய் ஒருடம்பிலே காரணங்களால் தோன்றிய நஞ்சை அப்புறப்படுத்து வதே யென்பது மருத்து நூலோர் கொள்கை யாதலின் நஞ்சை ஒழித்து உடம்பைத் தூய்மை செய்தற்கு நோய் இன்றியமையாது வேண்டப்படுவதேயாகும். மருந்துகளனைத்தும் நோய் மீறுகின்ற காலத்தே உடம்பு நிலை சிதைந்து போகாதவாறு தடுப்பதற்கு ஏற் பட்ட தடைகளேயாகும். தோன்றுகின்ற நோய்களை ஒழிப்பதற் குரிய ஆற்றல் உடம்பிலேயே அமைந்துளது. ஆதலின் இயற்கை நெறியிலேயே எத்தகைய தீப்பிணியும் ஒழிதல் இயலும். பருவுடம் பைப் பற்றிய நோய் மருந்தினால் ஓராற்றான் ஒழியுமேனும் நுண்ணு டம்பு பற்றிவரும் பிணிகள் மருந்தால் ஒழிதல் ஒருவாற்றானும் அமையாது. நுண்ணுடம்பு என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளும் மனம், புத்தி, அகங் காரம் என்னும் மூன்று அகக்கரணங்களும் சேர்ந்தமைந்ததாதலின்,

அதன்கண் கவலை, வறுமை, பகை, பொறாமை, சினம் முதலியவற்றைக் காரணமாகவுடைய நோய்கள் மருந்துப் பிரயோகத்தால் ஒழிய மாட்டா. நுண்ணுடம்பைப் பற்றிய பிணிகள் பருவுடம்பை மிக விரைவில் பற்றி அதனைத் துன்புறுத்தும். ஆதலின், மக்கள் தீய குணங்கள் தம்மைச் சாராதபடியும், கவலை முதலியவற்றிற்கு இடங் கொடாமலும் தூயராய் ஒழுகுதல் வேண்டும். இதற்குப் பஞ்சாக்கரம் முதலிய மனுக்களை மானதமாக உச்சரித்தல் நலமாம்.

இனி, உலகவாழ்வையே, உறுதியாக நம்பி அதில் ஈடுபட்டுப் பெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்களை நிலையென்று இறுமாந்திருப்பவர்க்கு நோய் அவர்களுடைய செயலின்மையையும்,புல்லிய வாழ்வையும் எடுத்து விளக்குதற்குரிய நல்லாசிரியரைப்போல் உதவுகின்றது. அழகினால் சிறந்தோமென்றும், இளமையால் உயர்ந்தோமென்றும், வளமை மிகுந்தோமென்றும் எண்ணிச் செருக்கி அறிவு மயங்கியிருக்கும் மக்களை உடனே தட்டி யெழுப்பி உன்னிலையை உண்மையாக அறி என்று உணர்த்துவது நோயேயாகும். அன்றியும், உற்றார் இன்னாரென்றும் உண்மை நண்பர் இன்னாரென்றும் நீட்டி யளந்தறிவிக்கும் கோல்போலுள்ளது நோயேயாகும். மேலும் இறப்பென்பது உண்டு, அஃது இன்று வருமோ நாளை வருமோ வென்று அறுதியிட்டுச்சொல்ல வியலாது. எனினும், அஃதொருநாள் வருதல் திண்ணம். என்னும் உண்மையையும்;

‘இளமை கழியும் பிணிமூப் பெய்தும்
வளமை வலியிவை வாடும்’ என்னும்

உணர்ச்சியையும் பயப்பது பிணியே. இவ்வாற்றால் பிணி வெங்குருவைப்போல் ஒறுத்தலினாலே நன்னெறி சற்பிக்கும் பான்மையது.

இனி, பிணியே இறைவனருளைப் பெறுதற்குக் காரணமுமாகும் பிணியை யடைந்த ஒருவன் வாழ்க்கையை வெறுத்து இறைவன் அருட்பாங்கை எண்ணி யெண்ணி உருகுதற்கும் இடம் பெறுவான். சைவசமயப் புலவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சூலைநோயே அருளைப் பெறுதற்குரியதாயினமையும், கூன் பாண்டியனுக்கு உற்ற வெப்பு நோயே ஞானசம்பந்தப் பெருமானருளைப் பெறுதற்குக் காரணமாயினமையும் கண்டுகொள்க. ஆதலின், நோய் வருதல் இறைவன் தனதுண்மையையும், உயிர்கள் தம் தன்மையையும் உணர்த்தற்கே யாமென்பதுங் கொள்ளப்படும். இவ்வுண்மையை உணர்பவர் மெய்யுணர்வுடைய பெருமக்களேயாவர். அவர்களே அறப்பெருங்கடலாகிய இறைவனது அருள் வெள்ளம் முடிவின்றி இடையறாது ஓடிக்கொண்டே உள்ளதென்றும், எல்லாம் அவன் செயலே யென்றும், தம் செயலென ஒன்றில்லையென்றும் தேர்ந்து தெளிந்து திருவருளே தாரகமாகக் கொண்டு கல்லைப்போலும், கோள்களைப்போலும், நாள்களைப்போலும் அவனியக்கத்திற்குச் சிறி

தம் மாறுபடாவண்ணம் தமது கருவிகரணங்களை நிறுத்தி வினை நுகர்வையும் உடனாளுகக் கொண்டு வாழ்வர். மற்றையோர் இறைவன் திருவுளப்பான்மை யின்னதென அறியாராய் எல்லாவற்றையும் தம் செயலாகவே யெண்ணி, இன்புற்ற காலத்து அதிலே அழுந்தி மகிழ்ந்தும், துன்புற்ற காலத்து அதிலழுந்தி வருந்தியும் வருவர். எவ்வாறாயினும் நடுநிலையுடைய இறைவன் எல்லார் மாட்டும் ஒப்பத் தனது அருளைச் செலுத்தி அவ்வவர் நிலைக்கேற்ப அவரை உணர்த்தி வருகின்றான். ஆகலின் நோய், வறுமை முதலிய யாவும் உயிர்களை நன்னெறிக்குச் செலுத்துதற்குரிய கல்லூரிகளாகவும், நன்மக்களை ஆராய்ந்து தெரிவதற்குரிய நெருப்புக் குண்டங்களாவும் விளங்குகின்றன. இத்தகைய உணர்ச்சியை நமக்கு அளிக்கும் பொருட்டு நாம் அருளையே நாடி நிற்போமாக. மணி. திருநாவுக்கரசு முதலியார்.

திருமண வாழ்த்து

வாழி சோதர ; வாழி சோதர ;
காழி மாநகர்க் கவுணியன் என்ன
மைந்தரைப் பெற்று மாண்புற வாழி
செந்தமி ழணங்கோ ! செழுந்திரு மகளோ !
விந்தை யீதென்ன வியந்துல குரைப்பப்
புந்தி மகிழப் புதல்வியர் தமையும்
பெற்றுவா ழியவே ; பெறலருஞ் சோதர,
சுற்றம் போற்றிச் சுகமுற வாழி ;
முந்தையோர் உரைத்த முதுமொழி காக்க ;
தந்தையும் தாயும் தரணி வாழ்தெய்வம் ;
பெற்றோர்ப் போற்றலில் பெரும்பே றில்லை ;
கற்றோர் உறவைக் கனவிலும் மறவேல் ;
மற்றோர் தமையும் மதித்துரை யாடுக ;
குற்றம் நீங்கிக் குணந்தனைக் கொள்க ;
மன்னுயி ரோம்பி மாண்புற வாழ்க ;
என்னருஞ் சோதர, எழில்குண மணியே,
பன்னருஞ் சிறப்பும் பாங்குறப் பெற்றே
இந்திர னென்ன இருநிதிக் குவையும்,
கந்தவே ளென்னக் கவின்பெ றுருவும்,
வள்ளுவ ரென்ன வயங்கு பேரறிவும்,
உள்ளங் குளிர உதவுநற் குணமும்,
அழியாப் புகழும், ஆயுள் நீட்சியும்,
ஒழியாச் சீர்த்தியும் உற்றுநா னிலத்தே
பெண்ணமர் பாகன் பிறைமதி சூடி
தண்ணருள் வலத்தால் தழைத்தே
வாழி சோதர, வாழி வாழியே.

மணி. கோட்டீச்சுவர முதலியார் B. A.

மொழிவரலாறு

இனத்தொடு இனம் சேர்தல் இயற்கை. மக்களோடு மக்களும், விலங்கொடு விலங்கும், பறவையொடு பறவையும் சேர்தலையே நாம் காண்கின்றோம். இதனைப் பார்க்குங்கால் ஒத்தவடிவும் ஒத்த அறிவும் கூட்டத்திற்குக் காரணம் என்பது விளங்குகின்றது. இதனாலேயே திருவள்ளுவரும் "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என அருளினர்.

அவ்வாறு உயிர்ப்பொருள்கள் தம்முட் கூடுங்கால் தத்தம் உட்கருத்தை வெளியிட நேரும். அவ்வாறு கருத்தை வெளியிடுதல் சமிக்கையாலும் ஒலியாலாகிய மொழியாலும் என இருவகைப்படும். சமிக்கையால் வெளியிடல் கண்காணுவிடத்துப் பயன்படாது. மொழியால் வெளியிடல் கண்காணாதபொழுதும் காதிற்பட்டு உணர்த்துவதாகும். உயிர்களின் உள்ளக்கருத்தாகிய பொருளை உணர்த்தும் ஒலிக்குறிப்பே 'மொழி' எனப்படும். அவ்வாறான மொழி மக்கள், விலங்கு, பறவை முதலிய எவ்வுயிர்க்கும் உரித்தாகும். ஆயினும் விலங்கு முதலிய, இயற்கையில் ஆய ஒலிவடிவ மொன்றாலேயே தத்தம் கருத்தை வெளியிடுகின்றன. அவற்றின் ஒலிவடிவ மொழிகளை மக்கள் உணரும் ஆற்றலுடையவரல்லர். இதனை இரண்டு நாய்களாதல், காகங்களாதல், ஆக்களாதல் தம்முட் கூடியபோது அவைகளிடத்துச செய்கை நிகழ்தலானறியலாம். மக்கள் ஒலிவடிவத்தோடு இல்லாமல் அவ்வவ் வொலிக்குத் தக்கவாறு எழுதப்படுவதாகிய வரிவடிவமும் அமைத்துக்கொள்ள ஆற்றலுள்ளவர். ஆகவே மக்கள் மொழிக்கு ஒலிவடிவு, வரிவடிவு என இருவடிவுண்டு. விலங்கு முதலியவற்றுக்கு, உயிர்கட்கு இயற்கைச் செயல்களாகிய உண்ணல், இருத்தல், கடத்தல், கிடத்தல் முதலியவற்றை மட்டும் குறித்தற் குரிய மொழிகளே சாலும், மக்கட்கோ அவற்றோடு பல்வேறு வகைப்பட்ட இயற்கைச் செயற்கைப் பொருள்களையும், செயல்களையும் குறித்த மொழிகள் இன்றியமையாதன. மக்கள் அவற்றோடு ஈடுபடுகின்றமையின். இது கருதியே இறைவன் மக்கட்கு, மொழிக்கு வரிவடிவம் அமைக்கும் ஆற்றலும் அளித்தனன் போலும்! இனி உலகிடமெல்லாம் ஓரே தன்மைத்தன்று. ஓரிடத்தே வெப்பம் மிகுதி, மற்றோரிடத்தே தண்மை மிகுதி. இவ்வாறே தண்மை மிகுந்தும், வெம்மை குறைந்தும், வெம்மை மிகுந்தும் தண்மை குறைந்தும், இரண்டும் ஒரே அளவிலும் இருக்கும் இடங்களும் பல, அங்கங்கே காணப்படு பொருள்கள் பல. மக்களும் பலர். ஆகவே மொழிகளும் பலவாயின.

முதன் முதல் மக்கள் தத்தம் கருத்தைச் சமிக்கையாலேயே வெளியிட்டனர் போலும். பிறகு நாள் செலச் செல ஒலிவடிவான

சொற்களாற் பொருள் குறித்தனர் போலும் ! மேலும் நாள் செலச் செல அறிவு முதிரப் பெற்றமையின் வரிவடிவமும் அமைத்தனர் போலும். இவ்வாறு ஆண்டாண்டு உறையும் மக்கள் ஆண்டாண்டுக் காணப்படும் பொருள்கட்குப் பெயரிட்டு வழங்கினர். பொருள்கள் இடந்தோறும் பலவாயினும் எவ்விடத்துக்கும் பொதுப் பொருள் களுமுண்டு. அவை மண்முதலிய ஐம்பெரும் பூதங்கள், ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலாயின. இவற்றை யெல்லாம் குறிக்க மொழி இன்றியமையாததன்றோ? ஆகவே கூட்டங் கூட்டமாய் ஆண்டாண்டுறையு மக்கள் இவை போன்ற பொருள்கட்குப் பெயர் கொடுத்து வழங்கிவந்திருத்தல் வேண்டும். அவ்வாறு வழங்கிய வையே மொழிகள்.

இனி இடம்பரந்த இடத்துச் சிலரும், சுருங்கிய இடத்துப் பலரும் இருப்பதை நாம் காண்கின்றோம். அவ்வாறு இடஞ்சுருங்கிய இடத்துள்ளார் இடம்பரந்த இடத்துக்குப் போய் வாழ முயலல் இயற்கையன்றோ? ஆதலின் மக்கள் முன்னாட்களில் சிற்சில இடங்களிலிருந்து வேற்றுப்புலங்கட்குச் செல்வாராயினர். அவ் வாறு சென்றவர் பெரும்பாலராயிருப்பின் தாம் சென்றவிடத்தும் தம் மொழியையேபரவச் செய்திருப்பர். சிறுபான்மையராயிருப் பின் ஆண்டிருந்தோர் வழங்கு மொழிகளையும் கைக்கொண்டிருப்பர். அவ்வாறு செய்தக்கால் அவரவர் முதற்கண்வழங்கிய மொழி தன் வடிவிற்சிறிது மாறுபடினும் படும். எவ்வாற்றானும் முதற்கண் அவரவர் வழங்கிய மொழி மறைந்து போமாறில்லை. ஆகவே ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றோர் மொழியில் வழங்குதலானே ஒரு மொழியினின்று மற்றொரு மொழி தோன்றிய தென்பது பொருந்துவதன்று, மொழிகள் மக்கட்குப் பொருளுணர்த்த ஏற் பட்டவாதலின் ஓரிடத்திலாம் பொருள் மற்றோரிடத்தினின்றுவரின் அவ்விடத்துளார் அப்பொருளை எப்பெயரான் வழங்கினரோ அப் பெயரானே வழங்கவே பெரும்பயன் தரும். இக்குறிப்பானன்றே நந்தாமொழித்தமிழ் இலக்கண நூலுடையார் வேற்றுப் புலத் தினின்று வந்து வழங்கிய சொற்களைத் 'திசைச்சொல்' எனவழங்கு வாராயினர்.

இவ்வுண்மையையெல்லாம் உணராச்சிலர் தம்மொழியே முதல் மொழி யென்றும், அதினின்றுமே ஏனையமொழிகளெல்லாம்தோன் றின என்றும் செருக்கிக்கூறித்திரிவர். அன்னூர் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண் பதறிவு" எனும் இயற்கையோடு ஆராயாமல் யான் என தென்னும் செருக்குக் கொண்டு ஆராய் வாராவர். அவர் கூற்று "காணுதாற் காட்டுவான் தான் காணன் காணுதான்—கண்டானுந்தான் கண்ட வாறு !" என்பதற்கு எடுத்துக்காட்டாம் என்க. மற்றும் அன்னூர் 'அகரமுதல வெழுத்தெல்லாம்' 'அக்கரங்களின்மும் அகரவுயிரின்

றேல்' எனும் அருமை மொழிகளை நன்குணர்ந்து, எம்மொழிக்கும் இயற்கையாகிய அகரவொலியே முதலானதென்றும், அஃதில்லாக்கால் மொழிகளே இடையாவாகுமென்றும், தம்மொழியும் அவ்வொலியானே ஆனதென்றும், ஒலியாவர்க்கும் இயற்கையின் உரித்தாதல் போல் மொழியும் யாவர்க்கும் உரித்தானதென்றும் தெளிந்து அடங்குவாராக.

மேற்கூறியாங்கு பரந்த இடமுடையதாய்த் தன் இடத்தை நோக்கச்சிலராய், அறிவின் முதிர்ந்து நாகரிகத்திற்றலை சிறந்து விளங்குபவராய் இருந்த மக்களுடைய இடங்களுள் நந்தம் தமிழ் நாடும் ஒன்று. அவ்வாறுனமையினன்றே வேற்றுப்புலத்தினின்று வந்தோரும் தமிழ் மொழியைக் கொள்வாராயினர், தமிழ் மக்கள் பெரும்பான்மையரா யிருத்தலின் தமிழ் தனிமொழி என்னத் தடையென்னை? அன்னதாதற்குச்சான்று தொல்காப்பிய மென்னும் தமிழ்ப் பேரிலக்கணமும், மற்றும் அதன்வழி வந்த பழமையான தனித் தமிழ் நூல்களாகிய பரி பாடல், புறநானூறு முதலிய நூல்களுமே.

இதுகாறுங் கூறியவாற்றல் மொழி, விலங்கு முதலிய எவ்வுயிர்க்கும் பொது வென்பதும், மக்கள்மொழிக்கு ஒலிவடிவம் வரிவடிவம் ஆகிய இருவடிவு உண்டென்பதும், பலவிடத்துப்பல பொருள்களும் பல மக்களும் இருக்கின்றமையின் மொழிகளும் பலவாயின என்பதும், மக்கள் ஒரு புலத்தினின்று மற்றோர் புலத்திற்குச் செல்ல நேர்ந்தமையின் மொழிகள் ஒன்றோடொன்று கலந்தன வென்பதும், அவ்வாறு கலந்து பட்டமாத்திரையானே ஒரு மொழியினின்று மற்றோர் மொழி வந்ததெனக் கூறல் பொருந்தா தென்பதும், ஒலி யாவர்க்கும் பொதுவாதல் போல மொழியும் யாவர்க்கும் பொது வென்பதும், தமிழ் தனிமொழி என்பதும் விளங்கும்.

கீ சதாசிவ நாயகர்.
முத்தியாலுப்பேட்டை, உயர்தாகலாசாலைத்
தமிழ்ப்புலவர்.

விடுகதை

அரும்பசுமை நிறமுடையாள். அவள்வளரும் இடம்குறிஞ்சி
திருவெண்ணீ ரொடுமினிய சிறுவெண்மண லவள்நேசர்
உருமாறி யதன்பின்னர் உயர்நட்ட...த் தான்பெற்று,
பெருநாடாம் மேனாட்டில் பெரும்புகழைப் பூண்பவள் யார்?

மணி. கோபால கிருஷ்ணன்
தமிழர் சங்கம், மாணவர் பகுப்பு.

அருட்செல்வம்

செல்வம், அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம் என்று மூவகைப்படும். இம்மூன்றினுள்ளும் அருட்செல்வமே இம் மாநில மன்னுயிர்களுக்குச் சாலச் சிறந்த செல்வமாகும். இச்செல்வம் என்றும் நீங்காததாய் ஒப்புயர்வின்றி விளங்குவதாம். அருமையாகிய மனிதப்பிறப்பைப் பெற்ற, ஒவ்வொருவரும் தம் மக்கள் மனைவியின் பொருட்டு பொருளைப் பெறவேண்டிய வழி எவ்வாறு என்று இரவும் பகலும் சிந்தித்து உண்ணவும் உறங்கவும் நேரமின்றி வெய்யிலென்றும் மழையென்றும் கவனியாது, மெய் வருந்த உழைத்துச் சம்பாதித்தல்போல, தத்தம் ஆன்மலாபத்தின்பொருட்டு எப்பாடுபட்டாயினும் அருட் செல்வத்தைக் கைக்கொள்ள முயலல் அவசியம். அவ்வாறில்லையாயின் தாங்கள் பெற்ற பிறப்பின் பயனை இழந்தோராவர். பொருட்செல்வத்தால் இன்பம் உண்டு என்று கருதி ஆசைவைத்தல் கூடாது. இச்செல்வம், வண்டிச்சக்கரம் சுழன்று வருதல்போல, வருவதும் செல்வதுமாய இயல்புடையது. இது பற்றியே நரை மூதாட்டியாரும் "ஆறிடும்மேடும் மடுவும்போலாம் செல்வம்" என்று கூறினரென்க. செல்வத்தாற் சிறப்புற்றோர் பலர் பின்னரொருகால் அனைத்தையும் இழந்து இரந்துண்ணும் நிலையையடைந்தனர் என்று சொல்லும் சரித்திரங்களும் மலிந்து கிடக்கின்றன. இச்செல்வம் இருப்பினும் இல்லாதிருப்பினும் துன்பத்திற்கும் கவலைக்கும் இருப்பிடமாகின்றது. இதை அனைவரும் அனுபவவாயிலான் அறிந்துள்ளார்கள். இதனாற்றான் "இன்னாறரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—யன்ன, தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா, லிழத்தலுந் துன்பமேயாம்" என்று நீதிவெண்பாவும், "செல்வமென்னு மல்லலிற் பிழைத்தும்" என்று திருவாசகமும் கூறிப் போந்தனபோலும். இத்தகைய வியல்புவாய்த்த செல்வத்தைப் பெறுவதற்கின்றி இரந்துண்ணவேண்டுமோ என்றொரு கேள்வி நிகழ்தல் கூடும். அவ்வாறு பொருள்கொள்ளல் சிறப்பன்று. முக்கியகருத்து என்னையெனின் தம் குடும்பத்தின் பாதுகாப்பிற்கு வேண்டியவரையில் பொருளைப் பெற்று திருப்தி அடைந்து சிறந்த அந்த அருட்செல்வத்தை பெற முயற்சித்தல் வேண்டும் என்பது. அருட்செல்வமே சிறந்த செல்வமென்பது எங்ஙனே யென்னின் அது பின்வரும் சைவசமயாசாரிய சுவாமிகள் திருவாக்கான் நன்கு விளங்கும்.

திருச்சிற்றம்பலம்.

செல்வநெடுமாடம் சென்று சேணோங்கி

* * * * * *

செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

திருச்சிற்றம்பலம்.

இதுகாறுங் கூறியவற்றால் அருட்செல்வம் எவ்வாறு சிறப்புடையதென்பது விளங்கலாயிற்று. இனி அருட்செல்வம் பெறுவது எங்ஙனம் என்று சிறிதே ஆராய்வோம். திருவருளாகிய இச்செல்வத்தை எல்லாம்வல்ல இறைவன்பால் பெறவேண்டும். அவர் எப்படிப்பட்டவரென்னின் மனவாக்கிற் கடந்து நிற்பவர். அவரை நாம் காண்பதெவ்வாறு? அவருக்கும் நமக்கும் வெகுதூரமாயிற்றே! தேடிப்பார்க்கலாமென்றால் எங்கென்று இவ்வூனக் கண்ணினால் தேடுவது? ஞானக் கண்ணினால் அடையலாம் என்றால் அஞ்ஞானம் தானிருக்கிறது. அவர் எங்கு எவ்வாறு விளங்கியிருப்பர்? என்னின் இதனை ஸ்ரீ வாகீசப் பெருந்தகையார் நன்கு அருளிப்போந்தனர்.

"விறகிற்றீயினன் பாலிற் படுநெய்போன்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்"

இத்தகைய ஈசனை ஆன்மாக்கள் அடைவது எங்ஙனம்? என்னின் "பத்திவலையிற் படுவோன் காண்க" என்றதே திருவாசகம். வேண்டுவோர் வேண்டியதுபோல் தரவல்ல பகவான் தன்னுடைய அடியாரிடத்தே ஒருபிடி பச்சிலைக்கும், தண்ணீருக்கும் ஆசைகொண்டிருக்கின்றார் எவராயினும், அப்பச்சிலையை யன்புடனிட்டு தொழுதேத்தினால் இறைவர் மகிழ்ந்து பேரின்பப் பெருவாழ்வை யளித்து ஆட்கொள்வார்.

"கல்லாலெறிந்தும் கைவில்லாலடித்தும் கனி மதுரச் சொல்லாற்றுதித்தும், நற்பச்சிலை தூவியும் தொண்டரினமெல்லாம் பிழைத்தன"

என்று தாயுமானாரும்,

"பச்சிலை யிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை"

என்று திருவெண்காட்டடிகளும் அருளியவை நன்கு சிந்திக்கற்பாலன.

அன்பர்காள்! இவற்றால் நாம் அறிவது என்னையெனின் நம் தமிழ்த் திருமுறைகளே இணையற்ற செல்வமென்று பொன்னே போற் போற்றி, முதற்காரணனாய் விளங்கும் முதல்வனடியினை என்றும் மறவாது உண்மையன்போடு வழிபட்டு நன்னெறியில் ஒழுகவேண்டுமென்பதாம்.

சோமங்கலம். கிருஷ்ணசாமி.

சாக்ரெடிஸூம் அவருடைய தருமோபதேசங்களும்

ஆதன்ஸ் என்னும் நகரில் புகழ்பெற்ற தத்துவஞானி ஒருவர் இருந்தார். அவர் பெயர் சாக்ரேடிஸ். அவர் விசாலமான நெற்றியும், அகன்ற வாயும், தடித்த உதடும், நீண்ட மூக்கும் உடையவர். அவரைக் கண்டமாத்திரத்தில் அவர் நற்குணம் வாய்ந்தவரென்றும் மனோதைரிய முடையவரென்றும் யாவரும் அறியும்படியான தோற்றத்தை யுடையவர்.

அவர் உயர்குலத்தைச் சார்ந்தவரல்லர். குலத்தொழிலோ சிற்பத்தொழில். அவர் ஒருசிறிதுகாலம் அத்தொழிலைக் கைப்பற்றி வந்து, பின் அதைக் கைவிட்டுப் போதிக்கும் தொழிலைக் கைக்கொண்டார். ஒருசில நாள் யுத்தவீரராயிருந்ததாகவும், டேலியம், பாட்டிடே என்னும் இரண்டு போர்க்களங்களுக்குப் போயிருந்ததாகவும் ஸேனபன் என்பவர் சொல்லுகிறார்.

சாந்திபி என்ற பெண் அவருடைய வாழ்க்கைத்துணைவி. அவள் ஒரு கொடுநீலி. அகமுடையானை அடக்கியாளும் அகமதி என்னும் அநீதக்காரி. கணவனுரையைக் கடந்து நடக்கும் குணமிலாக் கூரரிவாள். பதிக்கிடர்தரும் ஒரு பெரும்பாதகி. வாய்ச்சொல்லாலும், மனச்செயலாலும் தீச்சுடுவதுபோல் செய்யும் ஒரு பிடாரி. தன்னைக் கொண்டவன்மீது குறைசொல்லும் பேய்.

அவர், உயிரோடிருப்பதற்கு எவ்வளவு உணவு இன்றியமையாததோ அவ்வளவுதான் உட்கொள்வர். மிகுதியாய் ஈட்டி மிகுதியாய்ச் செலவுசெய்வதைவிட செலவுகளையும் விருப்பங்களையும் குறைத்துக்கொள்ளுதலே சிறந்தது என்பது அவர் கோட்பாடு.

ஞானியானபிறகு, கடைத்தெருக்களிலும், சந்தைகளிலும், மற்றும் பலபேர் கூடு மிடங்களிலும் பிரசங்கம் செய்வது அவர் வழக்கம். பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்பொழுது செருக்குக் கொண்டவனைக் கண்டால் அவனிடம் பல கேள்விகள் போட்டு அவனுடைய அறியாமையை அவன் உணரும்படிச் செய்வார். இவ்விதமாக சாக்ரெடிஸ் செய்வதனால் ஆதன்ஸ் ஊரிலுள்ள அநேகருக்கு சாக்ரெடிஸின்மேல் கோபமும் பொருமையும் உண்டாயின. சாக்ரெடிஸின் கொள்கை யாதெனில் "ஒவ்வொருவரும் தத்தம் நிலையை அறிவதுதான் ஞானமேதவிர பிறிதில்லை. ஒருவர் தம்முடைய அறியாமையை அறிந்துவிட்டாரானால் ஞானியாய்விட்டார்" என்பது. ஒவ்வொருவரும் தத்தம் அறியாமையை அறியத்தான்

அவர் ஒவ்வொரு இடத்திலும் பிரசங்கம் செய்வார். பிரசங்கங்களி னுலும், கேள்விகளினுலும் ஆதன்ஸ் நகரிலுள்ள பிரபுக்களின் மக்கள் அனைவரையும் தம்முடைய பக்கத்தில் சேர்த்துத் தம்கொள்கையைப் பலப்படுத்திக்கொண்டார். இளைஞர் அனைவரும் அவரை அனுசரி அவர் இட்ட கட்டளையை மனமுவந்து செய்வதைக் கண்ட பிரபுக் களுக்கு அவர்மேலுண்டான கோபம் அதிகரித்துவந்தது. இப்படி யிருக்க, ஒருநாள் அனிட்டஸ் என்னும் பெயருள்ள ஒரு தோல் வியாபாரியின் மகனைப்பார்த்து சாக்ரேடிஸ் "நீ உன்னுடைய பிதா வின் தொழிலைக் கைவிட்டு அதிற் சிறந்ததாயும் உன்னுடைய புத்திக் கேற்றதாயுமுள்ள வேறு தொழில் ஒன்றைச் செய்" என்றார். இப்படிச் சொல்லவே, அனிட்டஸ—க்குக் கோபம் அளவுகடக்க, அவன் அந்நகரிலுள்ள பெருமக்களனைவரையும் தன்னுடன் சேர்த்து சாக்ரெடிஸ்மேல் பிராதுபண்ணி அவருக்குமரணதண்டனை விதிக்கும் படிசெய்தான். அவர் தாம் செய்ததில் ஒரு குற்றமுமில்லை யென்றும், தாம் செய்தது எல்லாருடைய நன்மைக்கே யென்றும், தாம் நன்மை செய்வதற்கு ராஜாங்கத்திலிருந்து பணம் கொடுக்கவேண்டுமென்றும் தாம் அபராதமுறையில் சொற்ப தொகை கொடுப்பதாகவும் எதிர் வாதித்தார். ஆனல் முடிவில் அநேகர் அவர் செய்தது முற்றிலும் குற்றம் என்று சொல்லி அவருக்கு மரணதண்டனை விதித்து அவர் விஷபானம் பண்ணி இறக்கவேண்டு மென்று தீர்ப்புச் சொன்னார் கள். அவர் விதித்த தினத்தில் தம்முடைய சீடர்களும் நண்பர்க ளும் தன்னைச் சூழ நஞ்சுண்டு அவர்களுடன் மகிழ்ச்சியோடு உரை யாடிக்கொண்டே உயிர் நீத்தார்.

அவருடைய உபதேசங்கள்.

பயனுள்ள பொருளெல்லாம் அழகுள்ளனவே. ஒவ்வொரு பொருளையும் அதனதன் பயனளவிற்குத் தக்கபடிக் கருதி அதன் அழகின் தன்மையைத் திட்டஞ்செய்யவேண்டும். ஒரு வஸ்துவின் அழகுண்மையையும் இன்மையையும் கொள்ளவேண்டும், பொருளின் பயனின் அளவைவைத்து ஏனைய பொருளின் பயனை கருதிப்பார்க்க வேண்டுமே யொழிய முற்றும் பயனுள்ளதொன்றுமில்லை. எல்லாம் வல்ல இறைவனிடத்தில் நமக்கு வேண்டுவனவற்றையும் நமக்கு நன்மை பயப்பவற்றையும் அவரே அறிந்து கொடுக்கும்படி நாம் பிரார்த்தித்து வணங்கவேண்டும். இன்ன பொருள் வேண்டுமென்று வரையறுத்தும், குறிப்பிட்டும் வணங்குதல் சிறந்ததன்று. பொரு ளுதவிபெற்றுப் போதித்தல் சால்புடைத்தன்று. கைம்மாறு கருதா மலும் இலவசமாகவும் போதிக்கும் போதகாசிரியனே மதிக்கத் தக்கவன்.

யம். இ. வீரபாகு பிள்ளை பீ. ஏ.

வேதநாயகம் பிள்ளை

வேதநாயகம் பிள்ளை வேளாண் குளத்தூரிலே இருந்த சவுரி முத்துப்பிள்ளைக்குப் புதல்வர். சீகாழி, மாயூரம்முதலிய இடங்களில் ஜில்லா முனிசிப்பு உத்தியோகம் செய்திருந்தவர்; நீதிநூல், சர்வசமய சமரசக் கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம் முதலிய நூல்களைச் செய்தவர்; கத்தோலிக் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர். இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் அறிவைப் பெற்றனர்; முப்பது ஆண்டுகட்கு முன் தமிழ் நாட்டிலே வாழ்ந்திருந்தார். இவரே தமிழிலே முதன் முதல் நவீன கதை (Novel) எழுதினவர். இவர் பாட்டுக்கள் வெள்ளையாயும், இனிமையாயும் இருக்கும். இவருக்கு உயிர்களிடத்தும் மக்களிடத்தும் உள்ள அன்பை இவர் பாட்டுக்கள் தோறும் அறியலாம்.

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

பெற்றோர் பெருமை

சின்னவோர் பொருடந் தோரைச் சிவனுள்ளளவும் உள்ளத்து
உன்னவே வேண்டு மென்ன வுரைத்தனர் பெரியோர் தேகந்
தன்னையா ருயிரைச் சீரார் தரணியின் வாழ்வைத் தந்த
அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைம்மா றுளதோ அம்மா!

எப்புவி களும்பு ரக்கு மீசனைத் துதிக்க வேண்டின்
அப்பனே தாயே யென்போம் அவரையே துதிக்க வேண்டின்
ஒப்பனே யுளதோ வேலை யுலகிற்கட் புலனிற் றோன்றுஞ்
செப்பருந் தெய்வ மன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே.

வைத்தவ ருளமுவப்ப மலர்நிழல் கனி யீயாத
அத்தருத் தன்னை வெட்டி யழலிடுமாபோ லீன்ற
கைத்தலத் தேந்திக் காத்த காதாற்றாய் பிதாவை யோம்பாப்
பித்தரை யத்தன் கொன்று பெருநா கழற் சேர்ப்பானே.

ஈன்றவர் நம்மா லுற்ற வெண்ணரு மிடர்கட் கான்ற
மூன்றுல கமுமொப் பாமோ மூப்பினு விளைப்பால் அன்னார்
கான்றவன் சொற்கள் கன்னல் கான்றவன் பாகெனக்கொண்டு
ஊன்றுகோ லென்னத் தாங்கி யூழியஞ் செய்யாய் நெஞ்சே.

மண்ணினில் அன்னை தந்தை மறமறஞ் செயினு நோன்பு
பண்ணினு முடல்வ ருந்தப் பணிபுரி யினுமருந் தொன்று
உண்ணினுங் களிக்கி னுந்துன் புற்றய ரினுமனத் தொன்று
எண்ணினுந் தம்பொ ருட்டன் றிச்சுதர் பொருட்டா லன்றோ?

வேதநாயகம் பிள்ளை.

உழைப்பும் ஊதியமும்

பிரசுரம் 6

இந்திய தேசம் சகலவளப்பங்களும் பொருந்தியதாயிருந்தும், நம்முயற்சிக்குறைவால் நமக்கு இயற்கையாய்க்கிடைக்க வேண்டிய பலன்களை நாம் பெறாதிருக்கின்றோம். நமது தேசத்தில் பற்பலவிதமான பயிர்களுக்குத்தகுந்தவண்ணம் பற்பலவிதமான பூமிகளும் பலமாதிரியான சீதோஷ்ணங்களுமிருக்கின்றன. நம்நாட்டுமலைகளும், குன்றுகளும், நதிகளும், அருவிகளும், அடர்ந்த காடுகளும் எவ்வளவோ இயற்கைப் பொருள்களை உடையனவா யிருக்கின்றன. மலைகளிலும் குன்றுகளிலும் பலவகையான கற்களும், நதிகளிலும் பூமியிலுமிருந்து பலவகையான உலோகங்களும், காடுகளிலிருந்து பலவகையான உணவுப் பொருள்களும் நமக்குக்கிடைக்க நாம் பாக்யம் பெற்றிருந்தும் நாம்தரித்திரர்கள் போலல்லவோ காலந்தள்ளி வருகிறோம்? நம்முடைய நிலங்களைச் சோதித்து விளைவுதராதவைகளை விளைவுதரும்படியாக்கி, எவை எப்பயிருக்குரியவை யெனக் கண்டுபிடித்து அவைகளுக்குத்தக்கவண்ணம் உரம் போட்டுப் பலவிததானியங்களை விதைத்துப்பயனெய்தலாம். நம் நாட்டு இயற்கைப் பொருள்களைப் பல மாதிரி மாற்றி நன்மையனுபவிக்கலாம். நாம் இவை யொன்றும் செய்வதில்லை. நமது மாணாக்கர்கள் பள்ளிக்கூடம் விட்டு வெளியேறினவுடன் சர்க்கார் உத்தியோகம் பெறமுயல்வதையே அடுத்தகடமையாகக் கொள்கிறார்கள். நாம் அடைந்திருக்கும் சரித்திரத்தால் நமக்கு அவ்வித எண்ணம் உதிக்கின்றது. இளவயதிலேயே விவாகமாகிச் சிறுபிராயத்தே குழந்தைகளைப் பெற்றுப் பொருட்கஷ்டமும் சுகநஷ்டமும் காலப்போக்கும் மனச்சஞ்சலமும் அடைந்து வாழ்வுக்கே வருந்தும் பெரும்பான்மையானவர்களுக்கு வேறு யோசனை தோன்றாதல்லவா? ஏழைகள்பாடு இவ்விதமானாலும் நம்முள் கல்வியும் பணமும் அவைகளாலுண்டாகும் அறிவும் அவகாசமும் பெற்றோர், முயற்சியுடையோராகி நாட்டின் செல்வத்தையும் க்ஷேமத்தையும் விருத்தி செய்வதில் காலத்தைக் கழிக்கலாம்.

நம் நாட்டுப் பயிர்களால் நாமெவ்வளவுலாபம் அடையலாமோ அவ்வளவும் நாம் இப்போது அடையவில்லை. நம் பயிர்களை நாசப்படுத்தும் பூச்சிகளையும், நோய்களையும் நீக்கிப்பயிருக்கு க்ஷேமத்தைக்கொடுக்கும் மார்க்கம் நமக்குத்தெரியாது. தெரிவதற்குவேண்டிய முயற்சி நம்மிடமில்லை. மேலும் தெரிந்து கொள்ள அவாவுமில்லை யெனத்தோன்றுகின்றது; பூமியின்வயிற்றில் புதைந்து கிடக்கும் உலோகங்களைக்கிண்டி எடுக்கும் வழி நமக்குத்தெரியாது. எவ்வளவோ லாபத்தைக் கொடுக்கும் பொருள்களைப் பிரயோசனமற்றவை யெனக் களைந்தெறிகின்றோம். வாரி அலட்சியமாயெறியும்

குப்பை உரமென்றும், உமித்துத்தூரப் போடும் பழத்தோல் பல மான நாறென்றும் நமக்குத் தெரியவில்லே. நம் நாட்டுப் பருத்தி சரியானபடி பாதுகாக்கப் பட்டால் நாம் இலாபமடையலா மென் பது நமக்குத் தெரியாது. பாதுகாக்கும் முறைகளை நாமறியோம். இவ்விதம் நாம் எல்லாப் பயிர்வகைகளாலும் மிகுதியும் நஷ்டமே அடைகிறேம். நம் நாட்டுச்செடிகள், புஷ்பங்கள், கனிவர்க்கங்கள் முதலியவைகளைத் தாவரசாஸ்திரத்தின்படி விருத்திசெய்து நாம் பயனடையலாம். நாம் பாக்கியம் பெற்றும் அவைகளை யனுபவிக்க வழி தெரியாது. இலைமுன்னிருந்தும் வெறுங்கையோ டெழுந்த வனைப் போல் ஏமாறியிருக்கின்றேம்.

ஆகையினல் நமக்கு முக்கியமாய் வேண்டியது சாஸ்திரக்கல்வி. அக்கல்வியின்பலதுறைகளிலும் புகுந்து அவை எத்தகைய நன்மை களை யெல்லாம் கொடுக்குமோ அவைகளையெல்லாம் அறிந்து அடைய நாம் முயலவேண்டும். நம் முன்னேர்கள் ஆன்மசுகத்தை நாடி உலக வாழ்கைக்கு இன்றியமையாத சாதகங்களை வெறுத்திருக் கலாம். ஆன்ம சுகத்தைத் தேடவேண்டுமென்பது முக்கியமானதென் று இக்காலத்திலும் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இருந்தாலும் அதனலேயே நாம் உலகவாழ்வை அனுபவிக்க வேண்டியதில்லே யென்பது பெறப்படமாட்டாது. ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜபான் முதலிய நாட்டார் இத்துறைகளில் அடைந்த ஞானத்தை யும், அதனல் அவர்கள் பெற்றபலத்தையும், செழிப்பையும் உதாரண மாகக் கொண்டு நாம் நம்மை முற்படுத்த முயலவேண்டும். அப்படிச் செய்வது நமது முக்கியமான கடமைகளிலொன்றாகும். நம் நாட்டுப் பொருள்களால் நாம் நம்மை எவ்வளவோ மேம்படுத்திக் கொள்ள வழியிருப்பதால் நம்மைப் போன்ற பாக்கியவான்களில்லே. அப்படி யிருந்தும் நாம் முயற்சியின்றி யிருப்பதால் நம்மைப் போன்ற நிர்பாக்கியர்களுமில்லே.

M. V. நாதமுனி,
தமிழர் சங்கம் (மாணவர் பகுப்பு).

விடுகதை

சித்தர்புகழ் திருமதுரை நகரங்காட்டும்
தேவனுறை திருச்சைதா புரநன் ஞட்டில்
சிற்றுடை எடுத்துடுத்துஞ் சிறுபெண் ணல்ல ;
சிறுகநூல் அணிந்திருக்கும் பார்பா ரல்ல ;
ஒற்றையுடற் கெண்ணெயிடும் வணிக ரல்ல ;
உட்கழுத்தில் மணியுடைய தெருது மல்ல;
செற்றவர்தம் புரமெரித்தார் முன்னே நிற்கும்
சிறந்தநந்தி யதுவுமல்ல செப்பு வீரே.

சைதாபுரமாலே.

சிவராஜன்

அல்லது சகோதர ஒற்றுமை

அதிகாரம் மூன்று (தொடர்ச்சி)

ஞானம்பிகை தன் அண்ணன் வலதுதோளை இறுகப்பிடித்துக் கொண்டு அழுதகுரலுடன், "அண்ணா! என்னை மறக்காதே. எனக்கு என்ன கெர்வம் இருக்கிறது? நான் அம்மாளிடத்தில் கெர்வமாய் நடப்பேனே ஒழிய உன்னிடத்தில் எப்போதும் கெர்வமாய் நடந்ததில்லையே. எனக்கு மறதி எப்போதும் உண்டு அல்லவா? என்னை மன்னித்துவிடு," என மிக வணக்கத்துடனும் பரிதாபத்துடனும் கேட்டனள். ஆனால், சிவராஜன் அவளைவிட்டுத் திடுக்கென நீங்கிக் கோவிந்தன் வீட்டிற்கு ஓடினான். கோவிந்தன் வீடு நெல் எந்திரத்தின் பக்கத்தே இருந்தது. அவனுக்கு மனவருத்தம் மிகுதியாக இருந்தது. அவன் தன் அருமையான புறாக்களை இனி எப்போது காண்பதென மனம் உருகினான். அவனுக்குப் பறவைகளிடத்தில் மிக்க அன்புண்டு.

ஞானம்பிகை பெருங்குரலிட்டு அழத்தொடங்கினாள். அவள் தன் உயிர்க்குயிரான அண்ணன் தன்னிடத்தில் அன்பில்லையெனக் கூறியது அவள் சிற்றுயிரை வாட்டியது. அவள் அழுதுகொண்டே வீட்டிற்குத் திரும்பினாள். அந்தோ! பாவம்! அவளை ஆற்றுவார் ஒருவரும் இலர். அவள் விம்மிவிம்மி அழுதுகொண்டே ஒரு யோசனை தனக்குள்ளே செய்துகொண்டனள். அதாவது, தான் தன் வீட்டின் மெத்தைமீது எவருக்கும் தெரியாமற் சென்று அன்னம் அருந்தாமல் அங்குள்ள ஒரு தொட்டிக்குள் மறைந்து கொள்ளவேண்டும் என்பதாம். அவள் அவ்வாறு செய்தால் தன் தாய்தந்தை, அண்ணன் எல்லோரும் தன்னைக் காணாமல் பேரச்சம் எய்துவரென்றும், அதுபோழ்து அன்பில்லையெனக் கூறிய தன் அருமை அண்ணன் தனக்காக மனம் வருந்துவன் என்றும் எண்ணினாள். தன் அண்ணன் கருணையைப் பெறுதற்கு அவ்வழி ஒன்றே அவள் அறிவிற்கு எட்டிற்று. அவள் தான் எண்ணியவாறே தன் வீட்டின் மெத்தையில் ஒரு தொட்டிக்குள் போய் ஒளிந்துகொண்டனள்.

சிவராஜன் கோவிந்தனைத் தன் புறாக்களைக் கவனியாமைக்காக மிகக் கண்டித்துப் பின்னர்ப் பூந்தோட்டத்திற்குச் சென்று தன் முயல்களைக் கண்டனன். அவை நன்றாக இருந்தன. அவனுக்கு ஒருவித மனத்திருப்தி உண்டாயிற்று. முயல்களைக் கவனித்த கோவிந்தன் தன் புறாக்களைக் கவனியாதது என்ன கொடுமையென எண்ணி நெடுநேரம் மனம் வருந்தினான். அவனுக்கு உணவின்மீதும்

கவனம் செல்லவில்லை. அவன் தனிமையாக ஒரு இடத்தில் படுத்துக்கொண்டு தன் விருப்பத்தின்படி மனம் வருந்திப் பின்னர் வீட்டிற்குச் சென்றான். அப்போது பகல் மணி ஒன்று.

அவன் தந்தை அவனைக் கண்டதும், "சிவராஜா! என்ன இவ்வளவுநேரம்? சரியான காலத்தில் அன்னம் அருந்தவேண்டாமா? இதைக்கூடவா சொல்லிக்கொடுக்கவேண்டும்? உனக்காக நான் இன்னும் அன்னம் அருந்தவில்லை. உன் அன்னை உன்மீது மிகக் கோபமாக இருக்கிறாள். அவளைப் போய்ப் பார்" என்றனர்.

சிவராஜன் தன் அன்னையினிடம் ஓடினான். அவள் அவனைக் கண்டதும், "எங்கே ஞானம்? ஏன் இவ்வளவுநேரம்?" எனக் கேட்டனள். அவன் "அம்மா! ஞானம் இங்கு வரவில்லையா? அவள் வீடுவந்து நெடுநேரமாயிற்றே!" என்றான்.

சிவகாமி அம்மை அதைக்கேட்டதும் மிக்க சினமும், வருத்தமும்கொண்டு தன் கணவனிடம் ஓடிவந்து, "என்ன அநியாயம்! என் குழந்தையைக் காணோமே! ஞானம் எந்தக்கிணற்றில் தவறி விழுந்துவிட்டாளோ? ஐயோ! தெய்வமே! நான் என்னசெய்வேன்?" எனப் பெருங்குரலிட்டுத் தவித்தாள்.

சாம்பசிவ முதலியார் சிறிதும் அஞ்சவில்லை. அவர் அவளை நோக்கி, "பேதாய்! வருந்ாதே, உன் குழந்தை எங்கும் போகவில்லை. இங்கு எங்கேயாகிலும் இருப்பாள். தேடிப்பார்" எனக் கூறிப் பின்னர், சிவராஜனை நோக்கி, "சிவராஜா! அவள் சென்ற இடம் உனக்குத் தெரியவேண்டுமே? நீ அவளை என்னசெய்தாய்? நீ ஏதோ அவளைத் தொந்தரவு செய்திருக்கிறாய். அட! அன்பில்லாதவனே! அவள் உனக்காக என்ன பாடுபட்டுக்கொண்டிருந்தாள். அவள் கவனமெல்லாம் உன்மீதே வைத்திருந்தாள். உண்மையைச் சொல். நிகழ்ந்தது என்ன?" எனக் கூறினார்.

சிவராஜன், "அப்பா! ஒன்றும் நிகழவில்லை. அவள் மெத்தை மீது இருப்பள். நான் போய்க் கண்டுவருகின்றேன்" எனக் கூறி விரைவாக மெத்தைக்குச் சென்றான். அச்சமயம் ஞானாம்பிகை நெடுநேரம் தொட்டிக்குள் ஒளிந்திருந்து ஒருவரும் தன்னைவந்து தேடாமையால் மிக்க வெறுப்புற்றுத் தொட்டிக்குள்ளிருந்து வெளியேவந்துகொண்டிருந்தனள். அவள் அப்போது சிவராஜனைக் கண்டதும் மிக்க நாணமுற்றாள். சிவராஜன் கொல்லென நகைத்தான். அவள் ஓட்டமாக ஓடித் தன் அண்ணனைக் கட்டிக்கொண்டு, "அண்ணா! என்னை மன்னித்துவிடு. நான் பெருந்தவறு செய்யவில்லையே. உனக்கு என்மீது சிறிதும் கனிவில்லையா?" என மிகப் பரிதாபமாகக் கூறினாள்.

சிவராஜன் மனம் கரைந்துவிட்டது. அவன் அவளைத் தட்டிக்கொடுத்து, "ஞானம்! நான் உன்னை மறப்பேனா? வருந்தாதே.

நீ என் அருமைத் தங்கையாயிற்றே. கோபத்தால் ஏதோ சொல்லி விட்டேன்'' எனக் கூறி அவளைத் தேற்றினன். அவள் முகத்தில் பெருமகிழ்ச்சி பூத்தது. நடந்த விஷயத்தைத் தம் தாய்தந்தைய ரிடம் சொல்லவேண்டாம் என அவன் அவளைக் கேட்டுக்கொண்ட னன். அவள் அதற்குச் சம்மதித்தனள்.

இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு மிகக் களிப்புடன் கீழே இறங்கிவந்தனர். அச்சகோதர அன்பின் பெருக்கின் பொலி வைக் கண்டு சிவகாமி அம்மை ஆனந்தக்கடலில் மூழ்கினள். சாம்ப சிவ முதலியார் முகத்திலும் புன்னகை பூத்தது. அவர் இவர்கள் இருவர் பேரன்பும் எப்போதும் நிலைத்திருக்கவேண்டும் என இறைவனை மனத்துள் வணங்கினர்.

பின்னர் அனைவரும் அளவிலா மகிழ்ச்சியுடன் அன்னம் உண்டனர். சிவகாமி அம்மை ஞானம்பிகையைக் கட்டிப் பன்முறை பொன் முத்தம் பல அளித்தனள். (தொடரும்)

தமிழ்ப்புலவர், மணி. திருஞானசம்பந்த முதலியார்,
பத்திராசிரியர்.

நரியும் திராட்சைப் பழமும்

தான தனதன தான தனதன தான தனதன—தனதான

சிறு மதியுறு கோர நரியொரு கூறு மாமுறு
—கனிதாவிச்

சில மொடுமிக வான முயல்வொடு தாவி யுளமது
—தளர்வாகிப்

பாருள் இதைஎனக் காரு தருவரோ பாழித் துயர்என
—இனிதாகப்

பாய உளத்தினில் ஏயக் கனிநனி சீ சீ புளிப்பென
—உரைகூறித்

தாரு தனையொழித் தேகி வனமிடை தானு மிரைபெறத்
—தனித்தோடிச்

சாரு மிரைகொடு கூடு பசியொழிந் தோகை மிகமிகத்
—தழைவேகொண்(டு)

ஆரும் உவகையில் ஊறி யுறைந்தது போல மானுடர்
—அறிவோடும்

ஆரும் வினையினைத் தேறி யுளத்தினில் மான முயற்சியின்—
—மகிழ்வாரே.

மணி - திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

திருநீலகண்ட நாயனர்

நாடகம்

காட்சி I

இடம்:—திருநீலகண்ட நாயனர் வீடு.

(திருநீலகண்ட நாயனர் ஓர் ஆசனத்தமர்ந்து சிவபெருமானைக் குறித்துப் பாடிக்கொண்டிருக்கின்றார்)

பாட்டு

திருநீ லகண்டம் திருநீ லகண்டம் எனவே நினைந்து
—தொழுவேனே
பெருமான் தனக்கு மகிழ்பூ சைசெய்து பணிவாய் வணங்கி
—வருவேனே
ரிருவோ டளிக்கும் திகழ்பே ரறத்தைத் தினமே விரும்பிப்
—புரிவேனே
கருவே ரறுத்த அடியார் தமக்கு அமுதே அளித்தல்
—மறவேனே
திருநீ றணிந்த பெரியோ ரைநாளும் சிவமாய் நினைந்து
—பணிவேனே
திருநீ லகண்டன் திருநீ லகண்டன் திருநா மம்என்றும்
—மறவேனே.

(அவர் மனைவியார் வருகின்றார்)

திருநீலகண்டர்:—பெண்களில் உயரகோற்ற பாவாய்! பெரியோர் பணிவும், பெருமான் அன்பும் பெறுதல் எத்தகைய இன்பம்? —கற்புக்கரசி! களங்கமிலர்க்குயிலே! கணவனுரை கடவாத பாவாய்! உன் அருமைக் குணத்தாலன்றோ நம் இல்லம் இனிக்கின்றது? வரும் விருந்தினர்க்கு என்னுடன் கலந்து நீ செய்யும் உபசரணை பெரிதும் புகழத்தக்கதே.

அம்மையார்:—அன்புடயீர்! அறிவிலும், குணத்திலும் மிகத் தாழ்ந்தவள் என்னைத் தாங்கள் இங்ஙனம் புகழ்தல் நியாயமன்று. என்னுயிர்க் கணவ! எல்லா அறத்திலும் மிகச் சிறந்த தருமம் யாது? நான் இன்னும் என்ன செய்தால் நற்கதி அடையலாகும்? நான் தங்களுக்குத் தக்க மனைவியாதற்கு எவ்வாறு ஒழுகுதல் வேண்டும்? எனச் சதா எண்ணங்கொண்டவளா யிருக்கின்றேன்.

திருநீலகண்டர்:—என் இன்னுயிர்க் காதலி ! இளம்பிடியே ! தருமத்தில் இயர்ந்ததென்றும் தாழ்ந்ததென்றும் உண்டோ? எல்லாத் தருமங்களும் செய்யற்பாலனவே. ஆனுல், எம் இறைவன் — திருநீலகண்டன் திருத்தாளினிடத்தே அன்பு பூண்டால் அனைத்தும் தாமே வரும். அடியாரைக் கண்டால் சிவனெனவே வணங்கி வாழ்த்தல், அனைவர்க்கும் கடமையாகும். அச் செய்கையைக்கண்டு கருணை வள்ளலும் களிப்புறுகின்ருர்.

(அடியவர் சிலர் பாடியவண்ணம் வருகின்றனர்.)

அடியார் I:— பாட்டு

என்னப்ப னல்லவா—என் தாயி னல்லவா
பொன்னப்ப னல்லவா—பொன்னம் பலத்தவா
தாயின் மிக்க நல்லவா—சர்வசித்தி வல்லவா
நீ அப்பன் அல்லவா—நினக்கு நான் சொல்லவா.

(என்னப்பன்)

திருநீலகண்டர்:—புண்ணியப் பெருந்தகையே ! வரவேண்டும்—வரவேண்டும். மெய்யறிவும், மெய்யன்பும், மெய்ந்நெறியும் இல்லாத நாயினுங் கடையேன் பெற்ற செல்வமே செல்வம்.—ஏந்தலே! இச்சிறியேன் குடிசிலுக்குத் தாங்கள் எழுந்தருளியதற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யவல்லோம்? எங்கள் அற்பக் குடிசை தங்கள் திருவடி பட்டமாத்திரத்தே பொற்குடிசையாய்ப் பொலிகின்றது.

அடியார் II:—

கன்னிவன நாதா—கன்னிவன நாதா !

அன்னை வயிற்றில் அழிந்தநாள் போதாதோ ?
மன்னவனுய் வாழ்ந்து மறித்தநாள் போதாதோ ? (கன்)
நோயுண்ண வேமெலிந்து நொந்தநாள் போதாதோ ?
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ ? (கன்)
நில்லாமைக் கேஅழுது நின்றநாள் போதாதோ ?
எல்லாரும் என்பாரம் எடுத்தநாள் போதாதோ ? (கன்)

திருநீலகண்டர்:— விருத்தம்

அடியார் உறவும் அரன் பூசை நேசம் அன்பும் அன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ ? பங்கயன் வகுத்த
குடியான சுற்றமும் தாரமும் வாழ்வும் குபக்கலங்கள்
தடியாலடி யுண்ட வாறுக்கும் என்றினம் சார்ந்திலரே.

அடியவரே! வருவீர்-வருவீர். இதோ இப்பீடத்தின்கண் அமர்வீர். தேவரீரது வருகையால் எம் இல்லம் புனிதமாயிற்று. எளியேன் செய்த பாக்கியமே பாக்கியம்!

அடியார் III:— பாட்டு

அரகர சிவசிவ சம்பு—இந்த
அருமைத் திருநாமம் மனமே நீ நம்பு (அரகர)

பெண்டாட்டிப் பிள்ளைகள் வம்பு—அவை
விட்டவர்க் கானந்தம் என்று விளம்பு (அரகர)

சிவசிவ என்று நீ பேசு—உன்னை
என்றும் அணுகாவாம் ஆசைப்பிசாசு (சிவசிவ)

முப்போதும் திருநீறு பூசு—கொலை
பாவப்பழிகளை எப்போதும் ஏசு (சிவசிவ)

திருநீலகண்டர்:—முழுநீறு பூசிய முனிவரே! வருக-வருக. தங்கள் திவ்விய திருவடிகள் அடியேன் புல்லிய குடிசிலுக்கு எழுந்தருளியதைக் கண்டு மகிழ்வுறுகின்றனன். அண்ணலே! இதோ இப்பீடத்தின்மீது அமர்வீர். (தம் மனைவியை நோக்கிப்) பெண்மணி! அடியவர்க்குப் பூசை செய்தற்கு வேண்டுவனவெல்லாம் கொணர்வாய். (மனைவியார் கொணர்கின்றனர்)

(திருநீலகண்ட நாயனாரும் அவர் திருமனைவியாரும் அவ்வடியார் திருவடிகட்கு நீர்வார்த்துப் பூசிக்கின்றனர்)

(பின் இருவரும் அருச்சனை புரிகின்றனர்)

திருநீலகண்டர்
அம்மையார் } திருநேரிசை

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலால் நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்ற இங்கு ஆட்டி னோமே.

—அரகர மஹாதேவ.

திருநீலகண்டர்:—முற்றுந் துறந்த முனிவர்களே! நல்லறிவில்லாத நாயினேம், தங்களை உபசரிக்கு முறைமை ஏதென இன்னும் நன்குணர்ந்திலோம்—மன்னிக்கவேண்டும்.

அடியார் I:—தொண்டரே! மன்னிக்கவேண்டும். மாட்சிமை யில்லாத மிருகவர்க்கத்தில் சேர்ந்த என்னையும் இங்ஙனம் உபசரிக்க வேண்டுமோ? இந்நில உலகில் தங்களைப்போல் அன்பும், பணிவும், ஒழுக்கமும், வாய்மையும் உள்ளாரை இதுகாறுங் நான் கண்டிலேன்.

அடியார் II:—ஓ! திருநீலகண்ட நாயனரே! தங்களுக்குச் சமான மாகத் தேவரையும் சொல்ல இயலாது.

அடியார் III:—ஆ—என்ன பணிவு!—என்ன உபசரனை!—என்ன அன்பு!—ஆஹா—ஆச்சரியம்—ஆச்சரியம்!

திருநீலகண்டர்:—ஒன்றிலும் பற்ருத நாயினேனைத் தாங்கள் இவ் வாறு புகழ்ந்துரைத்தல் தக்கதன்று—மன்னிக்கவேண்டும்—திருநீலகண்டம்—சுவாமிகாள்—நாழிகையாகின்றது. அமுது செய்ய எழுந்தருளல் வேண்டும்.

அடியாாகள்:—சாம்ப சிவசிவ—அரோகர!

(எழுந்து செல்கின்றனர்)

(அம்மையார் பரிமாறுகின்றனர்)

(திருநீலகண்டர் தூபதீப ஆராதனைகள் செய்கின்றனர்)

அடியாாகள்:— தேவாரம்

அவ்வினைக் கிவ்வினை ஆம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே?
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெருத் திருநீலகண்டம்.

திருநீலகண்டர்:—சம்போ—திருநீலகண்டம்—திருநீலகண்டம்—திருநீலகண்டம்.

(ஆனந்தத்தால் கூத்தாடுகின்றனர்)

அடியவர்கள்:—நமப்பார்வதிபதயே!—"அரகர மஹாதேவா"

(அடியவர்கள் அருந்துகின்றனர்)

அம்மையார்:—சுவாமிகாள்! இந்தப் பொரியல் மிகுதியும் சுவையு டைத்து. இன்னும் சிறிது அருந்துதல் வேண்டும். அடியவரே! இஃது எடு நிறைந்த பசுந்தயிராகும். குளிர்ச்சி செய்யாது. தாகம் தீர உண்ணுதல் வேண்டும். தாங்கள் இவ்வளவு குறை வாகச் சாப்பிடுகின்றீர்களே! இப்பச்சடியும், பாயசமும் சிறி தேனும் புசித்தல் வேண்டும்.

திருநீலகண்டர்:—அரனடிக்கே அன்புபூண்ட அடிகளே! திவ்வியம் பழுத்த இத்தேமாங்கனியினையும், நறுந்தேனொழுகும் இப் பலாக்கனியினையும் சிறிது உண்ணுதல் வேண்டும். அன்பரே! அடியோம் செய்த குற்றம் யாது? பிழைபொறுத்து இனிதே திருவமுது செய்தல் வேண்டும். தங்களுக்கு இன்னும் என்ன வேண்டும்? தேவரீர் கருணைகூர்ந்து விளம்புதல் வேண்டும்.

அடியவர் I:—ஓ! நாயனரே! தங்கள் அன்பின் தன்மையை ஆதி சேடனாலும் புகழ இயலாது. மன்னிக்கவேண்டும். எல்லாக் கறிகளும் அதிகமே உண்டேன். அதுவும் தங்கள் அன்பின் காரணமாகவே இன்று அளவுக்குமேல் அன்னமும் உண்டேன்.

அடியவர் II:—எல்லாம் திவ்வியமாகவே இருக்கின்றன. எத்தகைய சிறப்புவாய்ந்த மன்னனு யிருப்பினும் இப்பெற்றித்தாய விருந்து சாப்பிட்டிரான்.

அடியவர் III:—அதிலொன்றும் தடையே இல்லை. விடைகொடுக்க வேண்டும்—நாயனாரே! சென்று வருகின்றோம்.

அடியவர் I:—திருநீலகண்டரே! தங்கள் அன்பு நீடூழி வாழ்க—

(அடியார்கள் ஆசிர்வதித்துச் செல்கின்றனர்.)

திருநீலகண்டர்:—திருநீலகண்டம்—திருநீலகண்டம்.

(இருவரும் அன்பின் பெருக்கால் இறையவனைப் போற்றிப் புகழ்கின்றனர்.)

திருநீலகண்டர் }
அம்மையார் } பாட்டு.

அடியவர் பூசை ஆனந்தம்—அவர்க்
கமுதாட் டல்பர மானந்தம்—திரு
வடியிணை தொழுதல் சிவானந்தம் என—நவில்வோமே

அம்பலவன் புகழ் பாடுவமே—அவன்
அடியார் தம்மொடுங் கூடுவமே—உயர்
வாமவர் திருவடி சூடுவமே—இவை மறவோமே.

(இன்னும் வரும்)

ஞானமுத்து.

— —

சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் வரலாறு (தொடர்ச்சி)

நம் சுவாமிகள் தாம் பூவிருந்தவல்லித் தாலூக்கா பாடசாலையிற் கல்வி பயின்று வருங்கால் பரங்கிமலை யென்னு மூர்க்கண் நோயுற்றிருந்த தம் சிற்றன்னையைக் காணுமாறெழுந்த பேரவாவினன் அவ்வூரை நோக்கிச் செல்லுமாற்றிடை எதிர்பட்ட ஒருவரான் அவ்வம்மையார் சிவகதி எய்தினரெனக் கேட்டு அவர் தம் பிரிவினுக் காற்றாராய்,

அக்கறையா யென்னன்னை யன்புடனே பெற்றதுபோல்
தக்கபடி காத்திட்ட தாயாரைத்—துக்கமுடன்
நீக்க னலமலையே நேர்பிருங்கி மாமலையே
தாக்குற்றாய் விம்மலையே தான்

என்றோர் வெண்பா வியற்றி ஓராற்றான் மனம் தணிந்து சென்றன ரென்ப. தாலுக்கா கல்விச்சாலையி லிவர்வகுப்பினாசிரியராயமர்ந்த சேஷாத்திரி ஐயங்கார் என்பார் ஒருகால் தம் நண்ப ரொருவர்பால்,

நான்முகனை நாராய ணன்படைத்தான் நான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தே னிப்பொருளை
சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து

என்ற நாலாயிரப் பிரபந்தச் செய்யுளொன்றைக் கூறிஉரைவகுப்பக்கேட்ட நம் சுவாமிகள் உடனே, அச்செய்யுட் பொருள் அப்பிரமாணமாய் வேதோபநிடத முரணுமாறும் வைணவப் புனைந்துரையாமாறுங் காட்டி,

சங்கரனே நாரணனைத் தான்படைத்தா னம்மாலே
பங்கயனைப் பெற்றெடுத்தான் பார்மிசையிற்—றுங்கமுடன்
சத்தியமா யாரணங்கள் சாற்றியது மேயுணர்வீர்
நித்தியத்தைப் பெற்றுய்ய நீர்.

எனப்பாடிக் கற்பலகையில் வரைந்தனுப்பக் கண்ட ஆசிரியர் மற்றைய மாணவரால் இவர்களது தமிழ்க்கல்வி வளத்தையுஞ் செய்யுளியற்றும் ஆற்றலையு மறிந்துகொண்டு இவர்களை அருகழைத்து இன்சொற்கூறி, இன்று காஞ்சியில் வரதராஜப் பெருமாட்குநடைபெறும் கருடோற்சவத்தை வியந்தொரு செய்யுளியற்றுக வென்றதும் நம் சுவாமிகள்,

மெச்சும் புகழ்வரதர் மென்கருடன் மீதேறிக்
கச்சியினி லேயடைந்தார் கம்பீர—முச்சிதமாய்
மன்னியவே கம்பர் வலனுறைகா மாட்சியெனு
மன்னையிணைச் சுற்றுவ தால்

என்ற பாடலை யாத்துத் தரக்கண்ட அந்தணர் வியப்பும் அழுக்காறும் தம்முளத்தை மேற்கொண்டு கதுவப் பெற்றாராய், அன்றுமுதல் சுவாமிகளிடம் பகைமை பாராட்டி யாதும் ஓதுவித்தலின்றிவாளா போதுபோக்கின ரென்ப.

224878

இங்ஙனம், வேதோபநிடதப்பிரமாணங்களுட்படாது, வைணவக் கட்டாய் இமயம் முதற்கன்னியாகுமரியீறாக வெளிப்போந்துலாவும் மறை நான்கினும், உபநிடதங்கள் நூற்றெட்டனுள்ளும், இவற்றி லொன்றைக்காட்டுகவெனவினவியினர்க்கு, இவ்வுபநிடதங்களின்வேறாகப் பூர்வமாகவும், உத்தரமாகவும் எங்களிடமுள்ள தனித்தசிலஉபநிடதங்களுள் இவை காணப்படுமென வெற்றுரை கூறி "இதனைப்பிறரறியிற் சோர்வுபடுமென்றஞ்சிப் பொதிந்து வைத்துக்கொண்டு தாமே தம்முட் கொண்டாடுவாராய் மதமானங்களது மேலீட்டான் மூக்கரை நயஞ்சாதிக்கும்" போலிக் கையறியா மாக்கள் பொய்யுரைகளேதேனும் புறம்போதுமாயின் அவைகட்குத் தக்க பிரமாணப் பொருள் காட்டிச்சுவாமிகள் அவ்வப்போது மறுப்பாக வியற்றிய செய்யுட்கள் பல.

பின் 1869 ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கலாசாலையிற் சேர்ந்து கற்பாராயினர். அங்ஙனம் கற்றுவருங்கால்தமிழ்ச்சுவையமிழ்தம் பருகும் ஆர்வம் பெருகி மிக்க பேரறிவும் பரந்த நூலுணர்வுமுடையராய், சைவ இலக்கியத் தலைவராய், சுத்தாத்துவித சைவசித்தாந்த நூற்புலமை மிக்குச் சைவானுட்டானம் கைவரப் பெற்ற தெய்விக மனத்தராய் விளங்கிய சொர்க்கபுரம் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளை யண்மி,

> இலக்கிய வாரிமடுத் தீர்ங்கவிப்பா வாணர்க்
> கிலக்கிய மாரிபொழிந் தென்று—மிலக்கியமார்
> நண்ணுமிராமலிங்க நன்முகிலே யென்மனமாம்
> பண்ணையினு மேனிரம்பப் பண்,

என்ற பாடலை யடியுறையாக்கி, அவரால் பெரிது மன்புபாராட்டப் பெற்றுத்திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், யாப்பருங்கலக் காரிகை, திருசிற்றம்பலக் கோவையார்முதலிய கற்பிக்கப் பெற்று. அந்நற்புலமையோடு 1872 ஆம் ஆண்டில் காஞ்சிமாநகரஞ் சென்று சிவதீட்சை பெற்றுவந்து, மற்றுமவர்பால் புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச் சமயத் தொளியாய், புகலளவைக் களவாகி, பொற்பணிபோலபேதப்பிறப்பிலதாய், இருள் வெளிபோற்பேதமும் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப், பெருநூற் சொன்ன அறத்திறனால் விளைவதாய், உடலுயிர், கண் அருக்கன், அறிவொளி போல், பிரிவரிய வத்துவிதமாகுஞ் சிறப்பினதாய், வேதாந்தத்தெளிவாஞ்சைவசித்தாந்த ஞானசாத்திரங்களையும் புலங்கொளப் பயின்று, நலம்பெறகிரம்பி கேவலாத்துவித வேதாந்த சாத்திரங்களையுஞ் சித்தாந்த பார்வையாற் றேர்ந்து திகழ்ந்தனர். பின் உலகின்கண் நிலவும் உயிர்களெல்லாவற்றிற்கும் பொதுவகையானும், சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் சிறப்புவகையானும் உறுதி சூழ்தரும் உளங்கொடுவிளங்கிய ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளை வடலூர் பெருவெளிக்கட் சென்றிறைஞ்சி, அவர்களது திருவருணோக்கம்

பெற்றுத்திரும்பினர். 1873ஆம் ஆண்டில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருமயிலைத்தலத்தலத்தை யுற்றிருந்தபோழ்து அவர்தாம் வதியும் இல்லத் தருகுநின்று,

சீர்பெருகுஞ் சிரபுரத்து மீனாட்சி சுந்தரநற்
செம்ம லேறே
ஏர்பெருகு நின்வீட்டு வாயிலினி னிற்கின்றே
னெனைய ழைத்துப்
பேர்பெருகுங் கல்விநல மென்மேலு மென்றனக்குப்
பிறங்கி யோங்க
வார்பெருகு நின்னுசி யினைக்கூறி யன்புடனே
யாட்கொள் வாயே.

என்றோர் பாடலை இயற்றி அவர்பால் விடுத்தலும், அவர்கள் உடனேயழைத்து, தாம்கேட்டனவாக் கூறிய நூற்பொருள் சில வினாயினார்க்குப் போந்த விடைகண்டு மிகமகிழ்ந்து தாமியற்றி யச்சிடுவித்த நூற்கள் சிலவற்றோடு,

கலியாண சுந்தரவென் கண்மணியே நின்பால்
மலிவாகக் கல்வி வளரும்—பொலிவாகப்
பொற்புவியிற் கற்றோர் புகழச் சிவஞான
விற்பனனாய் வாழ்ந்திருக்க வே.

என்ற பாடலையும் பொறித்துத்தந்தனர். பின் 1875 ஆம் ஆண்டிற்றமது தமயனார் தொழில்மேற்கொண்டு நடாத்தும் செங்கற்புட்டென்னும் ஊர்க்கண் கிறுத்துமதப் பாதுகாப்பின் பொருட்டு வைத்து நடாத்தும் கலாசாலையிற்சேர்ந்து கல்வி பயிலுங்கால் அங்கு ஒளிபெறுமிலக்கணத் தெளிதமிழ்ப் புலமைவாய்ந்து இலக்கணக் கடலென விளங்கிய பேறை தசாவதானம், ஜகந்நாத பிள்ளையவர்களிடம் நன்னூல்விருத்தி, இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து முதலியன பாடங்கேட்டு உளங்கொளப்பயின்ற களங்கமில் புலமையோடு அவதானமும் பழகினர். அக்கால் புதுவதாக 1876ஆம் ஆண்டில் சென்னையினின்றும் செங்கற்பட்டிற்குப் புகைவண்டி வந்ததும் அதுகாணுமாறு அங்குற்ற தசாவதானியார்

பாருங்க ளோர்கொடியிற் பன்னுமிடம் போய்வாலாம்
வாருங்க ளென்னடை மாநிலத்தீர்

எனக்கூறலும், நமது சுவாமிகள் அதனை

—நீருங்கள்
காலா னடவாமல் காசுமிக நல்காமல்
மேலாக வாழவினி மேல்.

என்றோர் வெண்பாவாக்கி முடித்தனர். (தொடரும்)

தமிழ்ப் புலவர்,
பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.
தமிழர் சங்கம், இயற்றமிழ்ப் பகுதியின் காரியதரிசி.

ஒரு நல்லாசிரியன் கடிதங்கள்

கடிதம் 1

செல்வச் சிரஞ்சீவி நீலகண்டன் பரமன் அருளால் பன்னலங்களும் பெற்றுப் பாரினில் மன்னிவாழ்க:

அன்பு கனிந்த நன் மாணவ,

நலம். நினது அருமை நிருபம் கண்டு நான் அளவிலா மகிழ்வு கொண்டனன். நான் உங்களை விட்டுப்பிரிந்து வந்தேன் என்றாலும் என் உள்ளம் இன்னும் சீவரத்திலேயே நிலைத்திருக்கின்றது. புகைரதம் நான் ஏறினேனே யன்றி என் உள்ளம் ஏறவில்லை. நான் சீவரத்தைக் குறித்துச் சிந்திக்கும்போதெல்லாம் அன்பு ததும்பிய உங்கள் இன்முகப்பொலிவின் தோற்றம் என் கண்ணெதிரே நிற்கக் காண்கின்றேன்.

நான் நேற்று இரவு பத்தரைமணிக்கு எங்கள் தெருவில் சிறிது நேரம் உலாவினேன். அப்போது நான் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தேன். பாலை நிகர்த்த வெண்மதியின் தண்ணிய கிரணங்கள் என் கண்களைக் கவர்ந்தன.

"ஓ! வெண்ணிலவே! நீ என்ன அழகாகக் காணப்படுகின்றாய்! அன்று பாலாற்றின்கரையில் மிக்க பொலிவுடன் விளங்கி எங்களை இன்புறச்செய்தது நீ அன்றோ? இப்போதும் நீ அப்பெருமணற் பரப்பின்மீது நினது தண்ணொளிர் கிரணங்களை வீசுகின்றாய் அல்லவா? — என்ன ஆச்சரியம்! — இப்போது நான் உன்னைப் பார்க்கின்றேன்—அங்குள்ளோர்களும் உன்னைப் பார்க்கின்றார்களன்றோ? — நீ இவ்விருதிறத்தினரையும் காண்கின்றாய் அல்லவா? ஆனால், நாங்கள்மட்டில் ஒருவரையொருவர் கண்டோமில்லை" என்று இவ்வண்ணம் பலப்பல சிந்தித்துக்கொண்டிருந்தேன். அப்போது திடீரென அச்சந்திரன் மேகத்தால் மறைபட்டான். "ஓ! வெண்மதியே! நீ இப்போது வாலாஜாபாத்தில் காய்கின்றாயா? அல்லது, அங்கும் இவ்வாறே மறைபட்டுத் தோன்றுகின்றாயா? என்று எனக்குள் வினவிக்கொண்டேன். ஆனால், அச்சந்தேகம் எனக்கு உடனே நிவர்த்தியாகிவிட்டது. அஃது எவ்வாறெனில், இங்கு மழை பொழியும்போது அங்கு வெயில் காய்தலையும், இங்கு வெயில் காயுங்காலத்து, ஆங்கு மழைபெய்தலையும் நான் கண்டும் கேட்டும் இருக்கின்றேன் அல்லவா? அதனால் இவ்விதம் அங்கு இராதென்றே நிச்சயித்தேன். ஆனால், இல்விஷயமாகப் பல சம்பவங்களை நான் நேரிலும் கவனிக்கவேண்டும் என்று என்னுள் ஆசையுண்டாயிற்று. அஃதாவது இங்குச் சந்திரன் மண்டிலமிட்டால் ஆங்கும் அவ்வாறே மண்டிலமிடுகின்றானா? இங்கு நக்ஷத்திரங்கள் எந்த நிலையில் தோன்றுகின்றனவோ அவ்விதமே ஆங்கும் தோன்றுகின்றனவா? இங்குச்

சந்திரன் எந்த உருவமுள்ள மேகத்தால் மறைக்கப்படுகின்றானோ அந்த உருவமமைந்த மேகத்தினாலேயே ஆங்கும் மறைபடுகின்றானா? என்னும் இச்சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளுதலேயாகும். ஆதலின், நீ நாளைய 23-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு சரியாய் எட்டுமணிக்கு உன் தலைக்கு நேரில் தோன்றும் நக்ஷத்திரக் கூட்டங்களின் தொகுதி எவ்வாறு காணப்படுகின்றதோ அதனையும், அப்போது அக்கூட்டத்திற்கு அருகே மேகக்கூட்டம் தோன்றின் அதன் வடிவம் எவ்வாறு காணப்படுகின்றதோ அதனையும் உன்னால் இயன்ற வரை ஒருவாறு தெளிவாக ஒரு வெள்ளைக் காகிதத்தில் வரைந்து அனுப்புக. நானும் இங்குள்ள உன் நண்பர்களைக்கொண்டு அதே நேரத்தில் தலைக்கு நேரில் வானம் இவ்வாறு தோன்றிற்று என்பதைக் காட்ட ஒரு படம் வரைந்து அனுப்புகின்றேன். இதனால், சிறுவர்களாகிய உங்களுக்கு இயற்கைப் பொருள்களை ஊன்றிப்பார்க்கும் சக்தியும், அதனிடமாகப் பல உண்மை விடயங்களைக் கண்டறியும் ஆற்றலும் உண்டாகும் என்பது என் எண்ணம். ஆதலின், நீ குறித்த காலம் தவறாது சொல்லியவண்ணம் வரைந்தனுப்பவும். அடிக்கடி வானத்தையும், அதில் உள்ள சூரிய சந்திர நக்ஷத்திரக்கூட்டங்களையும், கடலையும், மலையையும், அகன்ற வெட்டவெளிகளையும், பசுமை நிறம் வாய்ந்த வயல்களையும், ஆறு-குளம்-ஏரிகளையும், மரமடர்ந்த காடுகளையும், பச்சைப்பசேலென்று பரந்து விரிந்துகிடக்கும் புற்றரைகளையும், காணலுறுவோர்கட்குக் கூரிய மதியும், தூய சிந்தையும், தெளிந்த அறிவும், சிவதத்துவ விளக்கமும் உண்டாகும் என்பதை நீ என்றும் மறவற்க. நித்தம் சில நிமிடங்களேனும் மோனவிரதம் பூண்டுவருவோர் அடையும் நலங்கள் மிகப் பலவென நான் உங்கட்கு அடிக்கடி கூறியிருக்கின்றனன். அதனையும் மறவற்க.

கடந்த சந்திரகிரகணத்தன்று இரவு மூன்று மணிக்கு நான் இங்குள்ள சில மாணவர்களோடு சமுத்திரக்கரைக்குச் சென்றிருந்தேன். அங்கே எண்ணில்லாத பிராமணர்களும் மற்றச் சாதியாரும் நிறைந்திருந்தனர். அப்போது அக்கடற்கரை தோன்றிய காட்சியினை என்னென்றுரைப்பேன்! மாசுமறுவற்று மிகத் தூய்மையுடன் விளங்கிய வானத்தின் வனப்பும்,—கதிரவனைப் பிடித்துப் பொடி செய்து வானத்தில் எறிந்ததொத்து ஒளியுடன் துலங்கும் நக்ஷத்திரக்கூட்டங்களின் நேர்மையும்,—நீலநிறம் வாய்ந்து பரந்து விரிந்து கிடந்த கடலினிடை, சீற்றங்கொண்ட மலைப்பாம்புகள் தம் படங்களை விரித்துச் சீறிவருதலை யொத்துச் சுருண்டு சுருண்டு மேலெழுந்து தாழும் அலைகளின் ஆரவாரக்காட்சியும்—பாற்கடலிடையே தேவாமுதப் பொற்குடம் தோன்றினாலன்ன வட்டவடிவுடன் பொன்னிறம் பெற்றுப் பருத்த நெருப்புக் கோளம்போல் மிக்க பேரொளிதாங்கிக் காம்பீரத்துடன் கடலினிடை திகழும் அதியற்புதத் தெய்விகத் தோற்றமும் நேரில் வந்து காண்போர்க்கே இனி விளங்கும்.

அப்போது என்னுள்ளெழுந்த ஆனந்தத்திற்கு ஓர் எல்லையில்லை. நான் நெடுநேரம்வரை அசைவற்று அவ்விடத்தே நின்றிருந்தேன்; இறைவனது அளப்பரும் ஆற்றலை, எண்ணி யெண்ணி மனம் கசிந்தேன்; கடவுள் இல்லை என்று கூறி இறுமாந்துழலும் பேதைகளின் மனப்பான்மை இருந்தவா என்னே—என்னே! என வருந்தினேன். அருள் பெருகி, அன்பு கனிந்து, உருகி—உருகிப் பாடிய அடியார்களின் அற்புதப் பாடல்களைப் பாடிப்பாடிக் களித்தேன்.

இவ்விதம் நாங்கள் காலை ஏழுமணிவரையில் அவ்விடத்தில் இருந்தோம். நீங்கள் அன்று இரவுப்பொழுதை எவ்வாறு கழித்தீர்கள்? சந்திரகிரகணத்தைப் பார்த்தீர்களா? பாலாற்றிற்சேனும் சென்றிருந்தீர்களா? நீ சிவஞானபோதத்தை அடிக்கடி மறந்து போகாமல் படித்து வருகின்றனையா? பிறமாணவர்க்கும் இதனைச் சொல். நீ உன் வகுப்பில் முந்துதற்கு முயல். நின் பாடப்புத்தகத்தில் நினது முழுமனதையும் செலுத்துக. தமிழைக் கருத்துடன் கற்று வருக. அன்று நாம் பாடசாலையில் கொண்டுவந்து உயரக்கட்டித் தொங்கவிட்டு வைத்திருந்த இலையானது இப்போது வேர்விட்டிருக்கின்றது என்று நீ எழுதியிருந்தாய். அஃது இப்போது எந்த நிலையில் காணப்படுகின்றதோ அதனையும் ஒரு படம் வரைந்து அனுப்புக. சென்னைக்கு யாரேனும் வருவோர் உளரேல் அந்தச் செடியின் கிளையொன்றினை அவர்கள்பால் கொடுத்தனுப்புக. இங்குள்ள மாணவர்கள் அஃது அந்தரத்தே நின்று எவ்விதம் வேர்விடுகின்றது என்பதைக் காண மிகவும் விரும்புகின்றனர். அஃது நீரும் இன்றி, மண்சாரமும் இன்றி எவ்வாறு வேர்விட்டு இலை பரப்பி வளர்ந்து வருகின்றது என்பதை நீ அறிய விரும்புகின்றாய் அல்லவா? கடவுளின் ஆச்சரியகரமான சிருஷ்டிகளில் அஃது ஒன்று. அது மண்சாரம், நீர் முதலியவைகளை ஆகாயத்திலிருந்தே பெறுகின்றது. வாயுவில் நீர் இருக்கின்றது என்பதை நீ பாடசாலையில் அறிந்திருக்கலாம். அந்த நீரையே அது கிரகித்துக்கொள்கின்றது. ஆகாயத்தில் காற்றினால் பறந்துசெல்லும் அணுக்கூட்டங்கள் (தூசுகள்) மண்ணின் சிறு பகுதிகளல்லவா? அவைகளின் சாரமே அதற்கு ஆகாரம். இஃதென்ன ஆச்சரியம் என்பதை நீயே எண்ணிப்பார். இதனினும் ஆச்சரியகரமான எத்தனையோ சீவராசிகள், நம் கண்களுக்குத் தெரியாமல் நம்முடன் வாழ்ந்துவருகின்றன. அவைகளைக் குறித்து இப்போது எழுதுதற்கு எனக்கு ஒழிவில்லை. பின்னர் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்:

அன்புமிக்க ஆசிரியன்,

ஞானமுத்து.

தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

மனமோகனன் அல்லது மாய மாளிகை

2. ஆ! என்ன ஆச்சரியம்! (தொடர்ச்சி)

மாளிகையினின்றும் வெளியேவந்த அம்முதியோரைக் கண்டதும், கோகிலாம்பாள் என்னும் அச்சிறுபெண், 'அப்பா!' என்று விரைந்து கூறி அவர் அருகே ஓடிச் சென்றாள்.

உடனே அவ்வயோதிகர், 'ஆ!—குழந்தாய்—கோகிலம்! வந்துவிட்டனையா! உன்னைக்குறித்து நாங்கள் எவ்வளவுநேரம் தேடிக்கொண்டிருக்கிறோம். இதுகாறும் நீ எங்கே சென்றிருந்தாய்? பின் எவ்வாறுவந்தனை?' என வினவிக்கொண்டே அச்சிறுமியைக் கட்டித்தழுவிப் பல முத்தங்கள் தந்தனர்.

அப்போது அவள் என்னைச் சுட்டிக்காட்டி இரகசியமாய் அவரிடம் ஏதோ இரண்டொருவார்த்தைகள் கூறினள்.

'ஓ! அப்படியா—அன்பரே, வரவேண்டும் — வரவேண்டும். இச்சிறுமி தங்களுக்கு மிகுதியும் சிரமத்தைக் கொடுத்துவிட்டாள்; மன்னிக்கவேண்டும். இப்பேருதவியைச் செய்த தங்களுக்கு நான் யாது கைம்மாறு புரியவல்லேன்—'

இவ்விதம் அம்முதியோர் கூறும்போது எனக்கு ஆச்சரியம் அதிகரித்ததேயன்றிக் குறைந்தபாடில்லை. நான், ஒன்றும் தோன்றப் பெறாமல் சிறிதுநேரம் திகைத்து நின்றேன்.—நண்பர்களே, நான் அவ்வாறு திகைத்து நின்றமைக்கு யாது காரணமென எண்ணுகின்றீர்கள்? நான் சில நிமிஷங்களுக்குமுன் வழியில் வண்டியில் கண்ட கிழவரே அவர். அதில் ஒன்றும் சந்தேகமில்லை—ஆ! என்ன ஆச்சரியம்!—

நான் அப்போதே அவரைப் பல கேள்விகள் கேட்கலாம் என எண்ணினேன். ஆனால், எனக்கு அச்சமயம் பேசுதற்கே நா எழவில்லை. அவரிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கின்றது என்பதை நான் திட்டமாய்ச் சொல்லுவேன். அவருடைய நரைத்த தாடியும், மிகக் கூர்மையான நாசியும், நெரித்த புருவமும், ஆழ்ந்த நுண்ணிய பார்வையும், பல மடிப்புக்களுடன் விளங்கிய அகன்ற நெற்றியும், வெண்ணிறம் வாய்ந்து சுருண்டு சுருண்டு கிடந்த தலைமயிரும் என்னை முற்றிலும் மயக்கிவிட்டன.

'ஏன்?—உள்ளே வரலாமே?—அதிகநேரம் வேண்டாம்.—ஒரு நிமிஷம்தான். வாருங்கள்—வாருங்கள்—ஐயோ! ஈரத்தில் நிற்கின்றீர்களே!—'

நேயர்களே, அம்முதியவர் அவ்வளவு அன்போடு அழைக்கும்போது அம்மாளிகையின் உள்ளே செல்லாமல் இருக்க என்றால் இயலுமா?—சொல்லுவானேன்? — நீங்களும் அத்தகைய நிலையில் அவ்விதமே செய்ய முயன்றிருப்பீர்கள்! அஃது எவ்விதமேனும் இருக்கட்டும்.—ஆ! என்வரையில், நான் அப்போது மயங்கியே இருந்தேன். கெடுமதி கண்ணுக்குத் தோன்றாதல்லவா? ஆதலின்,

நான் அம்முதியவரின் எண்ணத்திற்கு உடன்பட்டு அவருடன் உள்ளே சென்றேன். உடனே அப்பெரியவர் என்னை மிக்க மரியாதையுடன் ஒரு சிறிய அறைக்குள் அழைத்துச்சென்றார். நாங்கள் சென்ற சிறிது நேரத்திற்குள் யாரோ ஒருவர் அம்மாளிகையின் வெளிக்கதவினைத் தாளிடும் சத்தம் என் காதில் விழுந்தது.

3. மனையாள சாது

அவர் என்னை அழைத்துச்சென்ற அறையானது மிகவும் சிறியதாய் இருப்பினும், அதிக அழகாகவே காணப்பட்டது. ஆங்கு வைக்கப்பட்டிருந்த சாமான்களும் மிகுதியும் விலையேறப்பெற்றனவாயிருந்தன. அன்றியும் அவ்வறை முழுவதும் ஒருவித நறுமணம் வீசிக்கொண்டிருந்தது.

அப்பெரியவர் என்னை அங்குள்ள ஓர் ஆசனத்தில் அமரச்செய்தனர். கோகிலம் என்னும் அச்சிறுமி தன் நன்றியறிதலைக் களங்கமற்ற தன் புன்முறுவலால் காட்டி என்னிடம் விடைபெற்றுக்கொண்டு, வேலைக்காரியாய இலக்குமியோடு தன் படுக்கையறைக்குச் சென்றனள்.

அவர்கள் சென்றதும் அம்முதியவர், நான் அச்சிறுமியை எவ்வாறு சந்திக்க நேர்ந்தது என்பதை அறியவிழைந்தனர். ஆதலின் நான், அப்போது நிகழ்ந்த விஷயங்களைச் சுருக்கமாக அவருக்கு உரைத்தனன். அவைகளைச் செவியுற்ற அவ்வயோதிகர் நான் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக மிகவும் வருந்தினர்.

'அன்பரே, தாங்கள் புரிந்த இப்பேருதவியை நான் என்றும் மறக்கமாட்டேன். இச்சிறுமி மிகவும் துடுக்குத்தனமுள்ளவள் ; தங்களுக்கு மிகுதியும் சிரமம் கொடுத்து விட்டாள். மன்னிக்க வேண்டும்—தங்கள் நாமதேயம் யாதோ ?'

'என் பெயர் மனமோகனன் '

'ஓ! நல்லது—சந்தோஷம்—மனமோகனப்பிள்ளையோ ?—அல்லது முதலியாரோ ?'—

'நாங்கள் சைவ வேளாளப் பிள்ளை '

'ஓ! அப்படியா !—நாங்களும் அந்த வகுப்பினரைச் சேர்ந்தவர்கள்தான். என் பெயர் டெல்லிபாட்சா என்பது. ஆனல், எல்லோரும் 'பாட்சா' என்றுதான் அழைப்பார்கள். இஃது என் தாயார் வைத்த பெயர். என் சொந்தப்பெயர் சுந்தரம் பிள்ளை என்பது—தம்கள் ஊர் யாதோ ?'

'எங்கள் ஊர் தஞ்சைமாநகரம்'

'அப்படியா !—நாங்களும் அந்த ஊரார்தான் !—என்ன ஆச்சரியம் இது !—ஆனல், தாங்கள் எங்கள் குலத்தைச் சேர்ந்தவரே!—இதில் ஒன்றும் சந்தேகமேயில்லை—நல்லது ; மனமோகனப் பிள்ளையவாள்—'

'அண்ணா, எனக்கு அவ்வளவு நீண்ட பட்டப்பெயர் வேண்டாம். மனமோகனா என்று சொல்லுங்கள். அதுவேபோதும்.'

'அப்படியா, நிரம்பசந்தோஷம். எனக்கும் அதே எண்ணந் தான். பட்டப்பெயர் என்றால் எனக்குச் சிறிதும் பிடிப்பதேயில்லை. நல்லது ; மனமோகனரே, இன்று நம் வீட்டில் சிறிது சிற்றுண்டியேனும் அருந்துதல் வேண்டும்.'

இவ்விதம் சொல்லிக்கொண்டே, 'பாக்ஷா' என்னும் பெயர் கொண்ட அப்பெரியவர் தம் கையை இருமுறை தட்டி யாதோ ஒரு செய்கை செய்தார். சிறிது நேரத்திற்கெல்லாம், கண்டோர் நடுங்கும்படியான ஒரு பயங்கரமான உருவம் எங்கள் எதிரே வந்து நின்றது.

(தொடரும்)

சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்.
பத்திராசிரியர்

பொருள் விளங்காக் கடிதம்

கருஞின்னவ்வழக்
86—67—6478

அப்னே,

றுப் 71—6—6479 ரபிம்மிணைக இசடு 4—85 கழிம்மு உப்பைர் ரெப்பைகினுத்த ஓங்கைடாவை றுவமம் மொவ்வமைகிஞ் ர்றளிம்மிகேப். றீ அப்று அடரிஙக் அய்மு டசுளஞ் டேழ்வுக். றுப் கசுறுதே ஊசும்முடற்ளுடிவடே ழ்வுக்.

இய்யபக்:
றிப் அப்னப்,
க. ரா. ரி_ரய்மசப்.

அன்பர்களே, இக்கடிதம் சில மாற்றெழுத்துக்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளது. இதன் பொருள் தெரிந்தோர் தயைசெய்து இப்பத்திரிகையின் மூலமாக வெளியிடுவார்களாக.

வேதகிரி.
தமிழர்சங்கம்—மாணவர்பகுப்பு.

சென்றமாத விடுகதையின் விடை

பாக்கு வெட்டி.

சென்றமாத விடுகதைக்கு அநேகர் விடையெழுதி அனுப்பினர். அவர்களுள் முன்னதாக எழுதி அனுப்பினோர் வருமாறு,

1. குப்புசாமி, 2. சாமி செட்டியார், 3. பட்டாபிராம முதலியார், 4. அ. ச. அருணாசலேஸ்வரர், 5. டி. எம். ஜீவரத்தினம், 6. எஸ். கோவிந்தராஜன்.

சிவ - முத்து.

ஒரு குடும்ப சம்பாஷணை

பகல் சாப்பாடு முடிந்தபின்னர் இரங்கநாத ஐயர் சாய்ப்பு நாற்காலிமீது சாய்ந்து ஐந்து விரல்களாலும் பொடி எடுத்து ஒரேதடவையில் உரிஞ்சினர். அவர்மனைவி இலக்ஷ்மி வெற்றிலைப் பாக்கு எடுத்துக்கொண்டு அவர் அருகில் உட்கார்ந்தாள். மூத்த குமாரன் கிருஷ்ணசாமியும் அவன் தங்கை சரஸ்வதியும் புத்தகத்திலுள்ள படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இரங்கநாத ஐயர்:—அடே ! கிருஷ்ணசாமீ ! இந்த வருஷம் நீ பரீட்சையில் தேறுவாயாடா ?

கிருஷ்ணசாமி:—நான் ஒவ்வொரு பேபருக்கும் நன்ருகப் பத்துப் பன்னிரெண்டு கடிதாசிவரிஞ்சி தள்ளிப்போட்டேன். நான் அவசியம் இந்தவருஷம் பரீட்சையில் தேறி விடுவேன் அப்பா. !

இரங்கநாத ஐயர்:—நீ எப்போது பார்த்தாலும் தமிழ்—தமிழ் என்று அதையே கட்டிக்கொண்டு அழுகின்ருயே; அதுவாடா உனக்குச் சாப்பாடு போடப்போகிறது ? இங்லீஷ் படித்தால் நல்ல உத்தியோகத்திலமர்ந்து கௌரவமாக இருக்கலாம். தமிழ்படித்தவர்களின் திண்டாட்டம் தான் நன்ருகத்தெரிந்திருக்கிறதே. ஒருநாளாவது நீ இங்லீஷ் படித்ததை நான் காதாரக் கேட்டதே இல்லை. நீ பரீட்சையில் என்ன எழுதினயோ என்னமோ யாருக்குத் தெரியும்? படித்தால் முன்னுக்குவருவாய்; இல்லாவிட்டால் உன் இஷ்டம்.

கிருஷ்ணசாமி:—என்ன அப்பா ! வெறுமனே, இராமாயணம் அளக்கிறீர்கள் ? நான் இங்லிஷ் கூட படித்துகொண்டுதான் வருகிறேன். எல்லாம் எனக்குதெரியும். அப்பா தமிழென்ருல் நீங்கள் வயிறு எரிந்து சாகின்ரீர். அது இருக்கட்டும் அப்பா ! சரிகைவேஷ்டிகள் வாங்கித்தருவதாகச் சொன்னீரே, அதைவாங்கிக்கொடுங்கள்.

இலக்ஷ்மி:—இவனுக்கு வாங்கிக் கொடுத்தால் சின்னவன் நாகனுக்கு வாங்கித்தரவேண்டாமா? வாங்கித்தான் தரவேணும். என்ன சொல்லுகிறீர்கள் ?

இரங்கநாத ஐயர்:—பேசாமலிருடி. நாகன்தான் உனக்குச் செல்லப் பிள்ளை அவன் சின்னப்பயல் அவனுக்குச் சரிகை வேஷ்டி என்னத்துக்கடி ?

சரஸ்வதி:—அப்படியானல் அப்பா ! எனக்குப் பாவாடை ஒன்று வாங்கித் தரவேண்டும்.

இரங்கநாத ஐயர்:—உதைக்கிறேன்பார். கழுதை முண்டே ! உனக்கு இருபத்தெட்டு பாவாடை மேலாக்கு இருக்கு. இன்னும் என்னத்துக்கடி ? எல்லாம் இந்தலக்ஷிமி செய்தவேலை ஒரேமுட்டா பணத்துக்கு எங்கே போகிறது ? பாட்டன் வீட்டிலிருந்து கொண்டுவந்து வைத்திருக்கிருயா ? (சரஸ்வதி அழுகின்ருள்)

இப்படியிருக்கிறது நம்நாட்டில் குடும்ப ஒழுங்கு !

M. V. நாதமுனி

விளம்பரங்கள்

ஆத்மசக்தி

இஃது ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை இதில் காணப்படும் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கான வியாசங்கள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றின் அநுபவங்கள், வேதாந்தம் இதிகாஸ புராணங்களின் நுட்பம், விகடத்திரட்டு, வைத்தியக் குறிப்பு, சிறு கதைகள், அரிய பெரிய நவீனம் (காவல்). தேசிய கீதங்கள், மாணவர் சிறுமியர்க்கான இன்ப உரைகள் முதலியவை பல அறிஞர்களால் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவரும் விஷயமனைத்தும் ஆடவர் பெண்பாலர் சிறுவர் அனைவருக்கும் பயன்தரக்கூடியன.

வருட சந்தா:— உள்ளூருக்கு (புதுவை) ரு 0—12—0
வெளியூருக்கு வெளிநாடுகளுக்கு ரு 1—4—0

"ஆத்மசக்தி" கார்யாலயம், புதுச்சேரி.

கற்பகம்

ஒரு செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ. 1 0 0 வெளிநாட்டிற்கு ரூ. 1 8 0

இது கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம். வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரிய விஷயங்களுடன் வெளிவருகிறது. மானேஜர் "கற்பகம்" ஆபீஸ், புதுவை.

தேசானுகூலன்

இஃதோரு சிறந்த தமிழ்ப் பத்திரிகை. வாரம் இருமுறை பினங்கினின்று தேசிய ராஜீய விஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப் படித்தறிந்து கொள்ள வேண்டுமின்றி எழுத வியலாது.

உள்ளூர் வெளியூர்கட்கு வருடம் 1-க்கு ரிங்கி $ 10—0—0 அல்லது ரூபா 15—0—0 6 மாதத்துக்கு $ 5—5—0 அல்லது ரூபா 8—0—0

மானேஜர், தேசானுகூலன், பினங்கு.

தமிழகம்

மலாய் நாட்டின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. இஃது மலாய்நாடு. பிரஞ்சு, கொச்சின், சீனு நெதர்லாண்டு. இண்டிஸ், போர்னியோ, இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. கீழ்தேசப் பகுதிகளுக்கு இதன் வருட சந்தா, வெள்ளி 10.00. ஆறு மாதங்களுக்கு வெள்ளி 5.5. இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் கென்யா முதலிய மேல்நாடுகளுக்கு வருட சந்தா ரூ 15. ஆறு மாதங்களுக்கு ரூ. 8,

மானேஜர்:—"தமிழகம்" ஆபீஸ்,
190 பத்துரோட்டு, கோலாலம்பூர், ஐக்கிய மலாய்நாடுகள்.

கிராம பரிபாலனம்

மாதம் இருமுறை வெளிவரும் சிறந்த பத்திரிகை.

கிராமவாசிகள் கிராம அதிகாரிகள் ஆரம்ப ஆசிரியர் இவர்கள் நன்மையை நாடி உழைப்பது இப்பத்திரிகை. தாய் நாட்டின் உயிர் நிலே கிராமங்களாதலின் கிராம அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றமாகும். இத்தகைய முன்னேற்றத்தை நாடும் பத்திரிகையை ஆதரிப்பது தமிழர் கடமையாம்.

ஆண்டுச்சந்தா உள்நாடு ரு 5—0—0 வெளிநாடு ரு 6—0—0

மானேஜர்:—கிராம பரிபாலன் ஆபீஸ், திருநெல்வேலி.

தமிழ் போதினியை வாசியுங்கள்.

இது யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஓர் அரிய சஞ்சிகை. பிரபல பத்திரிகாசிரியர்கள் தேசாபிமானிகள் கல்விமான்கள் முதலிய பெரியோரால் பெரிதும் பாராட்டப்படுவதும் அரசியற் குறைகளை அஞ்சா நெஞ்சுடன் வெளியிடுவதும் பாமரஜனர்களை முன்னேற்றவல்லதும் இதுவே.

வருட சந்தா இலங்கை இந்தியா ரு 3 சிங்கபூர் மலாய்நாடு ரு 4

தமிழர் போதினி ஆபீஸ் P O வண்ணார்பண்ணை (இலங்கை.)

பணம்

திருச்சிறைப்பள்ளியினின்றும் 1-9-22 முதல் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவந்துலாவும் தெள்ளிய தமிழ் வாரவர்த்தமானி.

வாரந்தோறும் வெளியாவது தேசநன்மையையே நாடி எழுதப்படுவது அறிவைவிளக்கி உற்சாகத்தைக்கொடுப்பது தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்தது எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம் படிக்க படிக்க விஷயமறிவதில் பேரானந்தம் பெருகும். வருடசந்தா ரூபா 5

மானேஜர்:—பணம் ஆபீஸ் திருச்சி.

கமத்தொழில் விளக்கம்

இலங்கைத் கமத்தொழிற் பகுதியின் அனுமதிப்படி பிரசுரஞ் செய்விக்கப்படும் கமத்தொழில் விளக்கம் என்னும் மாதாந்தப்பத்திரிகை இலங்கைக் கமச்சங்கத்து அங்கத்தவர்களுக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

உள்ளூருக்கும் இந்தியாவுக்கும் வருஷம் ஒன்றுக்கு 1 ரூபா 50 ச.

பினங்கு சிங்கபூர் முதலியவைகளுக்கு 2 ரூபா 25 சதம்.

கமத்தொழில் விளக்கம் சிலோன்.

கதாரஞ்சினி

நாவல் நிறைந்த மாத சஞ்சிகை

1922வரு ஜனவரிமீ முதல் நடைபெற்று வருகிறது இதில் அரிய நவீனங்களும் வேதாந்தங்களும் விகடகதை விகட துணுக்குகளும் வெளிவரும் தற்சமயம் அதி அற்புதமாயுள்ள நாவல் எழுதப்பட்டு வருகிறது.

வருடசந்தா 1 4 0 வெளிநாடு 2 0 0 தனிப்பிரதி 0 2 6

மானேஜர்:—கதாரஞ்சினி ஆபீஸ் திருப்பாதிரிப்புலியூர்.

வியாபாரி

குறைந்த சந்தாவில் நிறைந்த விஷயங்களுடன்
வெளிவரும் சிறந்த மாதாந்தப் பத்திரிகை
உயர்ந்த நோக்கத்துடன் தேர்ந்த கல்வியாளரால்
எழுதப்பட்டுலவுகின்றது

வருடச் சந்தா:—உள்ளூருக்கு ரு 1 வெளிநாட்டுக்கு ரு 1¼

ஈஸ்வர கடாட்சத்தை பெறுவதற்குரித்தான பக்தி ரசக் கீதங்களுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

ஆண் பெண் பாலர்க்கு அறிவூட்டும் நன்னடை தீபிகையுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

இந்தியாவின் சீர்திருத்தத்தை மிக இனிமையா யுபதேசிக்கும் தேசிய கீதங்களுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

மாந்தர்களின் பலவீனத்தை உள்ளது உள்ளபடியே மொழிந்து அவர்களின் சபல புத்தியையும் மாறும் சுபாவத்தின் கூற்றையும் தெளிவாய் வரைந்து நன்னெறியில் நடப்பிக்கும் ஆற்றலுடையவரான பிராஞ்சு பிரபல கவி ரசின் என்பாரின் நூல்களைத் தழுவி எழுதப்பட்ட சௌந்தரவல்லி என்னும் நாவலுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

எக்கஷ்டம் நேரிடினும் உரியவர்களை துறந்தும் பிரியமுள்ளதை வெறுத்தும் கடமையே கைக்கொள்ளவேண்டும் எனும் விரதத்தையும் உலகில் மாந்தர் எவ்விதம் இருக்கவேணும் என்பதையும் நன்கு விளக்கிக்காட்டிய பிராஞ்சு நாடக ஸ்தாபகரான கொனேய் என்பவரின் நூல்களை தழுவி வரையப்பட்ட பாரிதம் என்னும் கதையுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

தன்னலங் கருதாது பொதுஜன அபிவிருத்தியை நாடியும் சந்தாத் தொகையை தர்மகைங்கர்யங்களுக்கு உபயோகப்படுத்தியும் உயிர்களுக்கு உதவுதலே ஈசனை ஆராதித்தல் என்னும் கொள்கையனுஷ்டித்து பரோபகார சிந்தையுடன் வெளிவரும் பத்திரிகை

இஃதொன்றே!

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வியாபாரியிடத்திலும் உலவவேண்டி குறைந்த விளம்பர விகிதத்துடன் வெளிவரும் பத்திரிகை

இஃதொன்றே!

விளம்பர விகிதம்.

	¼ பக்கம்	½ பக்கம்	முழுப்பக்கம்
1 மாதத்துக்கு	1 8 0	3 0 0	5 0 0
3 ,,	4 0 0	8 0 0	12 0 0
6 ,,	6 0 0	12 0 0	20 0 0
ஒருவருடத்துக்கு	10 0 0	20 0 0	30 0 0

முழுத்தொகையும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

வியாபாரி காரியாலயம் புதுச்சேரி.

சோதிட கலாநிதி

ஓர் அரிய தமிழ் சோதிட மாதாந்தப் பத்திரிகை.

இதில் சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் பத்திமார்க்கம், ஸ்திரீகள் பதிவிரதா தருமம் ஆகிய பல அரிய பெரிய விஷயங்கள் வெளிவருகின்றன. இது அவரவர்களுடைய காலபலத்தையும், அந்தந்த மாதத்திய லாபநஷ்டங்களையும் நன்கு விளக்கும் ஆற்றலுடையது. நன்கு கற்றறிந்த பண்டிதர்களால் எழுதப்பெற்றுப் பிரதி தமிழ்மாதம் முதல்தேதியில் வெளிவருவது.

வருஷ சந்தா உள்நாடு ரு 1—0—0 வெளிநாடு ரு 1—4—0

"ஜோதிடகலாநிதி" ஆபீஸ், வேலப்பாடி, இராயவேலூர்.

குடும்பதீபம்

குடும்பத்தை நடத்துவதற்குரிய நல்லறிவைக் குடும்பங்களுக்குப் பரவச்செய்வதற்கான உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சந்தா விபரம்:- உள்ளூருக்கும் இந்தியாவிற்கும் ரு 1 4 0
அயல் நாடுகளுக்கு ரு 2 4 0

பத்திராதிபர் 'குடும்பதீபம்' வட்டுக்கோட்டை, சிலோன்

இந்துநேசன்

சனிக்கிழமைதோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதில் இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியுள்ளன.

வருடசந்தா ரூ 6 0 0 தனிப்பிரதி அணா 2

'இந்துநேசன்' ஆபீஸ், 65, அரமனைக்காரன் தெரு, சென்னை.

பேராசிரியன்

துரைத்தனத்தாரால் ஆதரிக்கப்பட்டது

பள்ளிக்கூடங்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உபயோகமான மாதாந்தப் பத்திரிகை. வருடசந்தா ருபா 1 8 0

என். வெங்கடராயலு அண்டு சன்ஸ் முத்தியாலுபேட்டை சென்னை

ஜனரஞ்ஜனி

ஜனஸமூகம் கல்வி தேசசரித்திரம் மதம் சாஸ்திரங்கள் உபயோகமான விஷயங்கள் நாவல்கள் வேடிக்கை விநோதங்கள் முதலியவை நிறைந்துள்ள மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

உள்நாடுகளுக்கு ரு 2 வெளிநாடுகளுக்கு ரு 3 தனிப்பிரதி அணா 4

வி. நாராயணன் அண்டு கம்பெனி 4 கொண்டிசெட்டி தெரு மதராஸ்

விநோத விகடன்

விசித்திரப் படங்களுடன் வெள்ளிதோறும் தவறாமல் வெளிவரும் ஓர் இனிய விகடப் பத்திரிகை இதுதான்!

நீங்கள் சந்தாதாரராக இல்லாமலிருந்தால் உடனே சேர்ந்து இப்பத்திரிகையை வாசியுங்கள், இதில் உள்ளூர் வெளியூர் விசேஷங்களும் வெளியாகின்றது.

இந்தியாவுக்கும் உள்ளூருக்கும் ருபா 4—0—0
பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு ருபா 5—0—0

பத்திராதிபர்:—ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்,
விநோத விகடன் ஆபீஸ் வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

THE STAR WATCH COMPANY,

தி ஸ்டார் வாட்ச் கம்பெனி,

1/382, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை சென்னை.

ஜெண்டில்மேன் பாகெட் வாச்.

இந்தியன் கவர்மெண்டு குண்டுக்கு சரியான காலத்தைக்காட்டக் கூடியதும், கனத்த கண்ணாடியால் மூடி போட்டதும் அதிசு சிறிதும் பெரிதுமில்லாமல் நடுத்தர அளவுள்ளதும் உயர்தர ஜெர்மன் வெள்ளியினால் செய்த கெடியாரம். விலை 1-க்கு ரூபா 5 8 0

8-மூலை கரப்பு டையல் பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த 8-மூலையுள்ள பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் பார்வைக்கு வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும், சரியான காலத்தைக் காட்டும், வெகுகாலம் நன்றாய் போகும் இரவில் மணி நன்றாய்த் தெரியும்

உயர்ந்த தோல்பட்டையுடன் 9—8—0
டை நிக்கில்கேஸ் ரேடியம் 8-மூலை உள்ள கைகெடியாரம் தோல்பட்டையுடன் 8—0—0

எலக்ட்ரோ கோல்ட் பிளேட் 8 மூலை ரிஸ்டு வாச்

இக் கெடியாரத்தின் கேசும் பிராஸ்லட்டும் எலக்ட்ரோ கோல்டினால் செய்யப்பட்டுப் பார்வைக்கு வெகு சுந்தரமாயும் படத்தில் காட்டியதைப்போல் இருக்கும் இக் கெடியாரம் அமெரிக்காவில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டது ஒவ்வொரு கெடியாரமும் நேரில் பார்வை செய்து அனுப்பப்படும். பிராஸலெட்டுடன் ரூ. 8-8-0
வெள்ளி கெடியாரம் ரூ 9-0-0. நிக்கல் கேஸ் ரூ 7-0-0.

ஓவல் ஷேப் என்னும் முட்டை வடிவமுள்ள ரிஸ்லேட் கெடியாரம்.



இதை கையில் அணிய வெகு நன்றாய் இருக்கும் இது புதுமாதிரியானது பார்வைக்கு அழகாய் முட்டை வடிவம்போல் நீண்டு அழகாய் செய்யப்பட்டது சரியான காலம் காட்டுவதுடன் வெகு நன்றாய் போகக்கூடியது.

உயர்ந்த தோல்பட்டையுடன் ரூபா 8.

ஷை கெடியாரத்தில் இரவில் பார்க்க ரேடியமும் சகிண்டு முள்ளும் உள்ளது ரூபா 9

N. T. விஜயா அண்டு கோ.,

அமைகோ என்னும் நூதன பயாஸ்கோப் பெட்டி.

இந்த ''அமைகோ'' ஜெர்மனியில் தயார் செய்தது. இதில் ஜெர்மனியின் தர்பார் பார்லிமெண்ட் சபையில் ஒருவருக்கொருவர், தர்க்கம் செய்து பேசுவது, இங்கிலாந்தின் பெரிய அரண்மனைகள், காங்கிரஸ் சபை, லார்ட் சபை, குதிரைப் பட்டாளம், பீரங்கிபட்டாளம், ஆகாய விமானம், பட்டாளம் முதலியவை கபாத் செய்வது, தொழிற்சாலைகளின் காட்சி, மிருகஜந்துக்கள் சர்க்கஸ் ஆடுவது, குதிரை மோட்டார் பந்தயங்கள், இதுவுமல்லாமல் கீர்த்தி வாய்ந்த ஐரோப்பிய ஸ்திரீ புருஷர் டிராமா ஆக்டர்கள் ஆக்ட்செய்த ஆட்டங்களையும் பெரிய பயாஸ்கோப் கம்பெனியில் காணுவதைப் போல் இரவிலும் பகலிலும் பார்க்கலாம்.

40 பல கலர் தந்த போட்டோ பிலிம்சுகளும் சேர்ந்து லென்சஸ் உள்பட கம்பிலீட் செட் 1க்கு ரூபா 1.

ஜலதரங்கம் என்னும் சங்கித வாத்தியப் பெட்டி.

பெரியவர்களும் சிறியவர்களும் சங்கீதம் கற்றுக்கொள்வதற்கு இது ஓர் ஏற்றகருவியாகும் ஜலதரங்கம் வாசிப்பதுபோல் இதை அருமையாக வாசிக்கலாம் விலை வெகு சுலபம்.

பெட்டி 1-க்கு ரூபா 1.

இங்கிலீஷ் டாக்டர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சுகானந்தா என்னும் இரகசிய ரப்பர் பை.

மேற்படி ரப்பர் பையை இங்கிலீஸ் டாக்டர்களால் பரீக்ஷைசெய்து சீமையிலிருந்து வரவழைக்கப்பட்டது. இதை புருஷர்கள் உபயோகித்து ஸ்திரீயின்பம் செய்வாராகில் எவ்வித மேகவியாதிகள் அணுகவொட்டாமல் தடுத்து வெகுநேரம் இன்பத்தை தரக்கூடியது. ரப்பர் கருவி 1-க்கு ரூபா 1-4-0

தேச பக்தர்களின் படம்.

மகாத்மா காந்தி, திலகர், லாலாலஜபதிராய், சி. ஆர். தாஸ், அலி சகோதரர்கள், சரோஜினிதேவி, பண்டிட் மாலவியா, லோகமாதா முதலான தேசபக்தர்களின் படங்களெல்லாம் மிக அழகாயும் தயாராய் வரவழைக்கப் பட்டிருக்கிறது.

50 படங்கள் விலை ரூபா 2.   25 படங்கள் விலை 1-4-0

நெ. 1-382, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

N. T. ஜீவா அண்டு கோ.,

ஜீவாஞ்சனம்.

ஸர்வ நோய்களுக்கும் சித்தௌஷதம்.

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்சளி சைத்தியம், கீல் பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலை நோய், வீக்கம் சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம். டப்பி 1-க்கு அணு 8.

டஜன் 1-க்கு ரூபா 5. வி. பி. வேறு.

ஜீவா பல் போடி.

டப்பி 1-க்கு அணு 4. டஜன் 1-க்கு ரூபா 2 8 0.

படுக்கை அறையின்

அழகிய காதல் படங்கள்.

இப்படங்களின் அழகை இதில் எழுதமுடியாததினால் சுருக்கி எழுதலானோம். இப்படத்தில் ஆண் பெண் இருவரும் காதல்கொள்ளுவதைப்பார்த்தால் மிக ஆச்சரியகரமாயும் விடா நகைப்பும் தரக்கூடிய முக்கியமான படங்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் படுக்கை அறையில் அவசியமாயிருக்கவேண்டும்.

12 படங்கள் விலை ரூபாய் 3 0 0

அமெரிக்கன் போட்டோகிரூப் மோதிரம்.



இம்மோதிரத்தின் சிறு துவாரத்தில் பார்த்தால் கிருஷ்ணன், காளி, ஈஸ்வரன் பிரம்மா, எமன், காசி ஜகன்னாதம் முதலியன காணப்படுகின்றன. இதை ஸ்ரீ புருஷர்கள் கையில் அணிந்துகொண்டால் லக்ஷிமிகரமும் முகதேஜசும் உண்டாகும். மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 0 0

ஒரே தடவையில் 3-மோதிரம் வாங்கினால் ரூபா 2 4 0

நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலகம்பனிகளில் செய்து விற்கப்படுகிற நரைமயிர் தைலங்கள் நரைத்த மயிர்களை கருக்கச்செய்யாமல் விகாரப்படுத்தி விடுகிறது. நமது தைலமோ நரைத்தமயிர்களுக்கு பூசின 5 நிமிஷத்தில் கருமைநிறமாக்கி வருவதுமன்றி மறுபடியும் முளைக்கும் நரைத்த மயிர்களெல்லாம் கருமையாகவே முளைக்கும். நமது தைலத்தை உபயோகித்தபின் பிறகு தாங்களே அநேகருக்கு இதன் குணத்தை தெரியப்படுத்துவீர்களென்று நம்புகிறேன்.

புருஷ் உள்பட புட்டி 1-க்கு ரூபா 1 4 0

சௌகார்பேட்டை, சென்னை.

N. T. ஜீவா அண்டு கோ.,

கதறிவந்தவர் களிப்புடன் செல்வார்.
விஷந் தீண்டினவர் ஒரே நிமிஷத்திற்
குணமடைவார். குணமில்லாவிட்டால்
இனாம் ரூ. 100 இனாம்

சர்வ தேள் விஷ சஞ்சீவி

இதை உபயோகித்து குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு மேற் கண்ட ரூ 100 கொடுக்கப்படும். எல்லா வித விஷக்கடிகளும் இம் மருந்து போட்ட ஒரு நிமிஷத்திற்குள் நீங்கிவிடும்.

விலை பாகெட் 1-க்கு அணா 8.
டஜன் 1-க்கு விலை ரூ. 5.

நிக்கல் சிகரெட் கேஸ்.

இவைகள் ஜெர்மன் சில்வரால் செய்யப்பட்டவை பார்வைக்கு சுத்தமாகவும் பளபளப்பாகவு மிருக்கும். இதை சட்டை ஜேபியில் வைத்துக் கொள்ளலாம் இதில் சிகரெட், சிரு சுருட்டுகள் வைப்பதினால் சருகுபோல் உலராமலும் மணம் குணம் மாறாமலிருக்கும்.

ஒஸதி ரூ 1 0 0
2-ந்தரம் அணா 8

மன்மத தாதுபுஷ்டி கோலாசுல குளிகை

விலைமாதர்களிடம் காதல்கொள்ளும் புருஷர்கள் மேற்படி மாத்திரையை உபயோகித்துக்கொண்டு ஸ்திரீயிடம் சம்போகத்திற்கு துடங்கினால் இந்திரியம் ஸ்கலிதமாகாமல் நெடுநேரம்வரையில் லீலா இன்பத்தைத் தரக்கூடியது. ஷை மாத்திரை உபயோகிக்கும் விபரம் மாத்திரையுடன் அனுப்பப்படும்.

25 மாத்திரைகள் டப்பி 1-க்கு ரூ 2—0—0
12 மாத்திரைகள் டப்பி 1-க்கு ரூ 1—0—0

ரோமசங்காரி என்னும் தர்பார் சோப்.

இந்த சோப்பைத் தேய்த்தவுடன் தேகத்தில் எந்த இடத்திலுள்ள ரோமங்களையும் நீக்கிவிடும். இதனால் எவ்வித எரிச்சல், கறை மற்றக் கெட்டவாசனை எதுவும் கிடையாது.

இதை ஒருமுறை உபயோகித்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

3-சோப் அடங்கிய பெட்டி ரூ. —14—0
6 ,, ,, 1—10—0

N T, ஜீவா அண்டு கோ., 1-382, தங்கசாலைத் தெருவு, சென்னை.

N. T. ஜீவா அண்டு கோ.,

எலெக்டிரிக் சிகார் லைட் விளக்கு

இந்த விளக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும் வத்தியும் அதைக் கொளுத்த நெருப்புக்குச்சியும் தேவையில்லை. எலெக்டிரிக் சத்தியினால் எரியும் நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன்படி செய்து மேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கிரத்தை திருப்பினால் திக்கென்று பளபளப்பான பிரகாசத்துடன் எரியும் பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையை கழட்டிவிட்டு பெட்ரோல் எண்ணை போட வேண்டியது.

லைட் 1-க்கு விலை ... ... ரு 1 0 0

ஒரே தடவையில்3-லைட் ... ... ரு 2 10 0

எலக்டி க் கைவிளக்குகள்.

எஃகுவினால் செய்யப்பட்டதும் உயர்ந்த நிக்கில் பாலிஷ்குடுத்ததும் 2-அங்குல லென்சுடன் பாகட் லாம்பு அளவுள்ள பாடரி பல்புடன் விலை ரூபா 5-8-0.

டார்ச் லைட் கம்பிலீட் பாட்ரி பல்புடன் விலை ரூபா 8.

பேபி டார்ச் லைட் „ ரூபா 5.

எலக்டிரிக் பாகெட் விளக்குகள்.

1¼-அங்குல லென்சுடனும், பல்பு, பாட்டரிகளுடன் விலை ரூ. 2-8-0 தனிபாடரி 1-க்கு அ. 12. தனிபல்பு அ 6

புல்ஸ் ஐ லென்ஸ் பாகெட் லாம்பு ரூ. 5

வவ்வல் லென்ஸ் பாகெட் லாம்பு ரூ. 4

டிரை கலர் லாம்பு ரூ. 4

அமெரிக்கன் எலக்டிரிக் ஸ்டவ் என்னும் நூதன அடுப்பு.

இந்த ஸ்டவ்வுக்கு எவ்விதமான பிட்ரோல் எண்ணெயும் அல்லது ஸ்பிரிட்டும் தேவையில்லை இதனுடன் வரும் பெட்டியிலிருக்கும் கட்டியை ஒன்று எடுத்து இந்த அடுப்பின்மேல் வைத்து தீ வைத்து விட்டால் பெரிய ஸ்டவ்களைப்போல் பற்றிக்கொள்ளும் இதனால் காப்பி டி, கஞ்சி, பலகாரம் முதலானது வெகு சுலபமாய் செய்து கொள்ளலாம். இதன் விலை ரூபா 3,

பவுண்டன் பேனா பென்சல் எலக்டிரிக் லைட்.

இதில் ஒரு பக்கம்பேனா ஒருபக்கம் பென்சிலும் மறுபக்கம் எலக்டிரிக் லைட் அமைத்திருக்கிறது தீப்பெட்டிக்கு பதில் இந்தப் பேனா ஒன்று கையில் இருந்தால் எப்போதும் தீப்பெட்டியாகவும் எழுதுவதற்கு பேனாவும்' பென்சலும் அடங்கியிருப்பதுமன்றி பார்வைக்கு பவுண்டன் பேனா போல் செய்திருக்கிறது, அழகான நிக்கல் கிளிப்பும் அடங்கியிருக்கின்றது.

பேனா 1-க்கு ரூபா 1-8-0.

நெ. 1-382, தங்கசாலைத் தெரு, சௌகார் பேட்டை, சென்னை.

நூதனமான சேலைகள்.

மதுரை அழகிய புட்டாச் சேலை.

16-முழம் விலைமிகவும் சரசமாயும் பார்வைக்கு அழகாயும் நேர்த்தியாயும், நீடித்துழைக்கக் கூடியதாயுமிருக்கும். விலை ரூ. 5.

	ரூ.	அ.		ரூ.	அ.
பார்ஸி சரிகை சேலை	7	8	நரசாபுரம் சாதா	7	4
சாவித்திரி	7	4	புதுச்சேரி	6	4
வெள்ளை மாங்காய்	5	8	சகுந்தலா	8	0
பந்தர் தவனக்கொடி	4	8	ரோஜா கலர் சரிகை	8	0
நடுத்தர வங்காய் பொரை	6	0	காளாஸ்திரி மல்	4	0

பட்டு அங்கவஸ்திரங்கள்.

இவைகள் மிக நேர்த்தியான பளபளப்புள்ள பட்டினால் செய்தது, இவைகளை ஆண்பிள்ளைகள் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் மேலாக்காகவும், சிறுபிள்ளைகள் தாவணியாகவும் உபயோகிக்கலாம். இதில் ரோஸ், பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, மேகவர்னம், வெங்காயப் புகைவர்னம், கத்திரிப்பூவர்னம் முதலிய அநேக வர்னங்கள் உண்டு, 5½ முழம் நீளமும் 2¼ முழம் அகலமும் உள்ள பட்டு துப்பட்டா அழகிய கரையுடன் கிடைக்கும்.

குட்டை 1-க்கு விலை ரூபா 3 10 0

கடுக்கன்கள்

இங்கிலீஷ் ரோல்ட் கோல்டில் செய்யப்பட்டு உயர்ந்த பாலீஷ் கொடுக்கப்பட்டதும் அழகான இமிடேஷன் கல் பதிப்பிக்கப்பட்டதும் ஜனங்கள் ரூபா 50-க்கு மதிப்பிடக்கூடியதுமானது.

கடுக்கன் ஜதை 1-க்கு ரூபா 1 4 0.

சாண்டோ ஆயில்.

நபும்சகம் ஆண்தன்மையிழந்த மானிடர்களுக்கு இத்தைலம் ஓர் ஊன்றுகோலாய் ஆதரிக்கிறது. அநேக தனவான்கள் இத்தைலத்தை உபயோகித்து நல்ல ஆச்சரியமும் ஆனந்தமடைந்திருக்கிறார்கள். புட்டி 1-க்கு விலை ரூபா. 1 0 0

இராஜஸ க்ஷவரக்கத்தி

இதை வைத்துக்கொண்டு க்ஷவரக்காலத்தில் நாவிதனிடம் கொடுத்து க்ஷவரம் செய்துகொள்வதால் அன்னியர்களுடைய சொரி சிரங்கு புண் கண்டு முதலியவை வாராமல் தலை எரிச்சலில்லாமல் சுகமாயிருக்கும் சீமை மேக்கர் நல்லமாதிரிகத்தி ரூபா 2 0 0

N. T. ஜீவா அண்டு கோ,

நெ. 1-382, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

N. T. விஜயா அண்டு கோ.,

வேடிக்கை! வேடிக்கை!!



இதை பார்த்தால் ஆஹா! என்ன வேடிக்கை. என்ன பொம்மைகள் ஆடுவது, வருவது, பார்த்தால்தான் உண்மை விளங்கும். இதன் பெயர்தான் பயாஸ்கோப் நிகரற்ற படம் விற்பனை ஆகிவிட்டது.

விலை மிக்க கம்மி. அணா 12 தான்.

விசித்திரமான ஸ்காந்த சக்கரம்.

இதில்கண்ட சக்கரத்தை சமமான இடத்தில் திருப்பி திரும்பும்படியான சமயத்தில் இதில் கண்ட மீன் மனிதர் டம்பல்ஸ் பாம்பு சக்கரம் வாத்து முதலானவைகளை ஒவ்வொன்றாய் இச்சக்கரத்தின் அடிபாகத்தில் மாட்டினால் நன்றாய் ஆடும் பார்ப்பதற்கு வெகு தமாஷாயிருக்கும் இதுவரைக்கும் பார்க்காதது. விலை 1-க்கு அணா 8

ரோல்ட் கோல்ட் மங்களூர் கைவளையல்கள்.



இது பளபளப்பான ரோல் கோல்டு இமிடேஷன் பொன்னினால் பலமாதிரி பூ இலைகொடிகள் ஒன்றோடொன்று பின்னியது போல வெகு அழகாயும் வேலைத்திரமாயும் செய்யப்பட்டு சீமையிலிருந்து வந்திருக்கிறது இதைபார்ப்பவர்கள் பொன்னால் செய்த கைவளையல் என்றே எண்ணுவார்கள் எப்பொழுதும் கருக்காமல் இருக்கும் இது எல்லா மதஸ்தர்களும் பெரியோர்களும் சிறியோர்களும் அணிந்துக்கொள்ளலாம்.

ஜதை 1க்கு விலை ரு 2. 2 ஜதை வாங்கினால் தபால் சிலவு இனாம்.

அமெரிக்கன் கோல்டு பாலிஷ் போடப்பட்ட 50 கெஜ்ஜைகள் கட்டின ஒட்டியாணம் 1-க்கு ரூபா 5. சிறிய சைஸ் 1-க்கு ரு 4

அமெரிக்கன் எலக்டிரிக் காரட் கோள்ட் மோதிரங்கள்.

இஷ்டமான ரகத்தை பெற்றுக்கொள்ளலாம் இவ்வழகிய மோதிரங்களில் வெள்ளை, பச்சை நீலம் சிகப்பு, கோமேதகம் வைடூரியம் என்னும் இமிடேஷன் கற்கள் புதைத்து பலவித சித்திரங்களுடன் படத்தில் காட்டியபடி தயார்செய்து ஜர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றது.

மோதிரம் 1க்கு ரு. 2. மோதிரம் 3க்கு 5-8-0

சௌகார் பேட்டை, சென்னை.

N. T. விஜயா அண்டு கோ.,

அழகிய ஜெர்மன் பாக்கெட் ஆயுதங்கள்.



அவுட் பிட்டில் 5 வித ஆயுதங்களை ஓர் கனத்த நிக்கல் சில்வர் திருகு குழையில் அடக்கம் செய்திருக்கிறது அடக்கம் செய்திருக்கும் ஆயுதங்களாவன திருப்புளி, கார்க்ஸ்குரு பாட்கின் என்னும் குத்தி, பர்மா முள் வாங்கி சிராவணம், உபயோகிக்க வேண்டிய ஆயுதத்தை, கனத்த நிக்கல் குழையைபேர்பாதியில் திருகினுல் இரண்டாகி விடும். பேர்பாதி குழையில் அருத்திருக்கும் இடத்தில் தேவையான அளகைமாட்டி பேர்பாதி குழையை திருகிவிட்டால் வெகு உருதியாகிவிடும். வேலையை செய்து முடிந்த பிறகு கழட்டி குழையில் போட்டு, பாக்கெட்டில் போட்டுக்கொள்ளலாம் வெகு அடக்கமாகவும், லேசாயும், உபயோகபாகவு மிருக்கும் குழையையும் 5-வித சாமான்களும் நிக்கல் கில்ட் கொடுக்கப்பட்டது.

இதன் விலை செட் 1-க்கு ரூபா 1—0—0

இமிடேஷன் டைமண்ட் கம்மல்கள்.

படத்தில் காட்டியபடி இந்த கம்மல்கள் அமெரிக்காவில் இருந்து கார்ட் ரோல்ட்கோல்டினுல் செய்து இமிடேஷன் வைரங்கள் பதிந்து தயார்செய்து வரவழைக்கப்பட்டது. பார்ப்பவர்களுக்கு கம்மல் மதிப்பு ரூபா 300 பெரும்படியாக யிருக்கும். இதை ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்,

பெட்டியுள்பட ரூபா 3—0—0

கையில் அழுத்தும் ஸ்பிரிங் விசிறி.

இவ்விசிரியானது சுப காரியங்களிலும் பொதுஜன கூடங்களிலும் பெட்ரும் முதலிய காற்று வசிதியில்லாமல் கஷ்டப்படும் காலத்திலும் இதை பெரியவிரலில் அழுத்தினுல் சுழன்று மனத்திற்கு ஆனந்தபரவச காற்று தருவது இதுவே.

விலை 1-க்கு ருபா 3 0-0

½-டஜன் அல்லது விசிறி விலை ருபா 8.

வாயில் வைத்து ஊதும் வாத்தியம்

இச்சிறு வாத்தியஙகள் சிறு பிள்ளைகள் வாயில் வைத்து ஊதினுல் வெகு இனிமையான சத்தம் உண்டாகும் சாக்யான மூள்ளவர்கள் இதிலேயே பாட்டுகள் வாசிக்கிறுர்கள். விலை அணு 12

பேஸ்ட் பௌண்டன் பேனு.

இப்பொழுது தான் சீமையிலிருந்து வரவழைக்கப் பட்டது இந்தப்பேனுவினுல் எழுதுவதனுல் மூத்துப்போலிருக்கும் சீக்கிரம் ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை பேனு 1-க்கு ரு 1-8-0

சென்னை.

224878

டிடக்டாஸ்கோப்.

அல்லது துப்பு (இரகசியம்) அறியும் கருவி.

இக்கருவியானது அமெரிக்கா தேசத்தில் புதிதாய் கண்டுபிடிக்கப்பட்டு தற்சமயம் எம்மால் முதல் முதல் வரவழைக்கப்பட்டன. இதன் உபயோகம் யாதெனில் இதன்மூலமாய் நாம் இருக்கும் இடத்தில் இருந்தே ஒருவரும் அறிந்துக் கொள்ளாமல் முத்திசையில் நடக்கும் பலவித ரகசியங்களையும் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களும் இன்னும் பலவித அந்தரங்கரகசியங்களையும் அவள் அறிந்துக்கொள்ளாமல் இதன் மூலியமாய் காணலாம். இவை பகல் அல்லது இரவு எந்த காலத்திலும் உபயோகிக்கலாம். இவை ஓர் அழகிய சிறு கருவியாகையால் ஒரு ஒருவரும காணாமல் ஜேபியில் வைத்துக்கொள்ளலாம். உபயோகிக்கும் விதங்கள் பார்சலுடன் அனுப்பப்படும்.



கருவி 1-க்கு ரூபா 2 0 0

கருவி 3-க்கு „ 5 0 0

ரூபாய் 500 மதிப்பிடக்கூடிய

ரோல்ட் கோல்ட்

இமிடேஷன் வைர மோதிரம்.

இம்மோதிரங்கள் ரோல்ட் கோல்டினால் செய்து இமிடேஷன் வைர வெள்ளை கற்கள் பதிந்து தற்கால நாகரீகத்திற்கு ஏற்றபடி தயாரித்து வரவழைத்திருக்கிறோம் இக்கற்களின் பிரகாசமும் ஜொலிஜொலிப்பும் அசல் வைர மோதிரத்திற்குச் சமானமாயிருக்கும். இதைப் பார்ப்பவர்கள் அசல் வைர மோதிரமென்றே நினைப்பார்கள் இவை இங்கிலீஷ் இமிடேஷன் டைமண்டு ஆனதினால் என்றைக்கும் கருக்காமல் பளபளப்பாகவே இருக்கும்.

மோதிரம் 1க்கு விலை ரூ 1—8—0

N. T. விஜயா அண்டு கோ.,
சௌகார்பேட்டை, சென்னை.

இனாம் ! பாக்கெட் பஞ்சாங்கம் (1924 வருடம்) இனாம் !

மேற்படி பாக்கட் பஞ்சாங்கத்தில், இங்லீஷ் தமிழ் வருட மாத தேதிகள் அமாவாசை கிருத்திகை பௌர்ணமி ஏகாதசி சஷ்டி விதைவிதைக்க நல்லநாட்கள் வருஷபலன் பல்லிவிழும்பலன் வாரசூலை ராகுகாலம் குளிகைகாலம் எமகண்டம், கௌரி யோகம் இந்து கிறிஸ்தவ மகம்மதிய முக்கிய பண்டிகை உற்சவங்கள் கவர்மெண்ட் ஹாலிடே முதலிய பஞ்சாங்கத்திற்குரிய யாவும் பாக்கெட் சயிஸில் வெகு அழகாக அச்சிட்டிருக்கிறது. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஷீட் அல்மெனாக் இனாமாக அனுப்பப்படும்.

நாவலர் அண்டு கோ.,
1-12, ஆரோக்யசாமி முதலி தெரு மிண்ட்பில்டிங்போஸ்ட் மதராஸ்

எலக்டரிக் கிள்ளட்டிகையும் பதக்கமும்.

சாதாரணமாய் பெண்கள் கழுத்தில் அணிந்துக்கொள்ளக்கூடியது சுத்தமாகவும் இருக்கும்.

டீக்கா பதக்கத்துடன் புதுச்சேரி மோஸ்தரு கிள்ளட்டிகை நேர்த்தியானதும் வெகு அழகுள்ளது.

1க்கு விலை ருபா 3—6—0

டீக்கா பதக்கம் இல்லாமல் சரடு மாத்திரம் விலை ருபா 1—12—0

தனி பதக்கம் விலை ருபா 1—12—0

மல்லிகைப்பூ ஒட்டியாணம்.



இந்த மல்லிகைப்பூ ஒட்டியாணமானது பின்புரத்திற் பெரியது சிரியது செய்யவும் சிறியதாக குண்டுகளும் வைத்திருக்கும் அதிக நேர்த்தியான வேலைத்தரத்துடன் செய்யப்பட்டது இதற்கு கீழ்புரம் மூன்று வரிசை மல்லிகைப்பூ குண்டுகள் அமைத்து நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கிறது. இது வெகு நன்றாய் இருக்கும். இதை தனவந்தர்களும் வாங்கி உபயோகிக்கிறார்கள்.

பொன்கிலிட்டுபோட்ட பெரிய ஒட்டியாணம் விலை ருபா 6—0—0

ஷை சிறுவர்களுக்கு சின்னது விலை ருபா 4—8—0

எலக்டிரிக்பொன் ஐந்து சிரசுள்ள 3 வரிசை சிலங்குகட்டிய ஜடைநாகரம் 1க்கு விலை ருபா 2—0—0

பரிமள கூந்தல் எண்ணைகள்.

இந்த எண்ணைகள் ஸ்ரீகளும் புருஷர்களும் பிரதிதினமும் கூந்தலுக்கு உபயோகிப்பதில் அதிக உற்சாகமும் மனக்களிப்பும் உண்டாகுவதுடன் கூந்தலும் அதிக செழிப்பாயும் நீளமாயும் வளரும்.

அதிக வாசனையும் பரிமளமுள்ள மல்லிகைப்பூ வாசனை 5 பலம் டப்பி 1க்கு விலை ருபா 1—0—0

சம்பங்கி எண்ணை 5 பலம் டப்பி 1க்கு ருபா 1—0—0

ரோஜாப்பூ எண்ணை விலை ருபா 1—0—0

எலக்டிரிக் தங்க சில் மோதிரம்.

இந்த சில் மோதிரங்களானது மிக்க அழகுடையது உயர்ந்த தங்ககிலிட் கொடுக்கப்பட்டுள்ளது தேவையானவர்கள் விரல்களின் அளவு அனுப்பவும் தவிர மோதிரங்கள் அளவையும் எழுதி அனுப்பினால் அதின்படி அனுப்பப்படும். விலை அணா 12.

N. T. ஜீவா அண்டு கோ.,

நெ. 1-382, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை.